விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 29 சனிக்கிழமை (14.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 026

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அமைச்சரவை மாறலாம்?

### அரசியலில் பரபரப்பு



(கொழும்பு)

பெருமளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவையின் மாற்றம் அடுத்த வாரத்தில் இடம்பெறலாம் எனகொழும்பில் அரசியல்வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த மாற்றத்தின்போது, பிரதமர் டி.எம்.ஜயரட்ண அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவரது இடத்துக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவுக்கான தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்ட சமல் ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை நாடு திரும்பினார். இந்நிலையில் அமைச்சரவை மாற்றம் தொடர்பான விடயங்கள் உறுதி செய்யப்படும் என அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## அங்கவீனமான பிள்ளைகளை விடுதலை செய்யுங்கள்!

### ஜனாதிபதிக்கு உருக்கமான வேண்டுகோள்

அங்கவீனர்களாக சிறையில் வாடும் தமது பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உருக்கமான கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்கள். தமது பிள்ளைகள் எந்த வித காரணமும் இல்லாமல் வருடக் கணக்காக சிறையில் வாடுவதையிட்டும் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பாக அவர்கள், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மூன்று தசாப்த காலங்களாக நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இன்று வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல மாவட்டங்களிலும் தேசியப் பாதுகாப்புக்கு எந்த விதமான அச்சுறுத்தலற்ற சூழ்நிலையே காணப்படுகிறது.

மேலும் இந்த கொடிய யுத்தத்தினால் கண், கால், கைகளை இழந்தும், இடுப்போடு உணர்ச்சிகளை இழந்த நிலையிலும் எங்களுடைய பிள்ளைகளும் உறவினர்களும் தாங்க முடியாத துன்பங்களோடு சிறையில் வாடுகின்றார்கள். இவர்கள் ஏனைய சக கைதிகளுடன் ஒன்றாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறதால் இவர்கள் ஏனைய கைதிகளால் மன வெறுப்புக்குள்ளாக வேண்டிய துர்ப்பாக்கிய சூழலுக்குள்ளாகிறார்கள். இட வசதியற்ற காரணத்தால் இவர்கள் தங்களுடைய அடிப்படையிலான தேவைகளைக்கூட செய்ய முடியாமல் தவிக்கின்றார்கள்.

எங்களுடைய பிள்ளைகள் சிலருக்கு காயங்கள் கூட இன்னும் சரியாக குணமடையாததால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஏமாற்றமளிக்கும் அறிக்கை பிரித்தானியா குற்றச்சாட்டு

இலங்கை அரசினால் வெளியிடப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள சில பரிந்துரைகள் ஏமாற்றமளிப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகாரப் பணியக அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் பிரித்தானிய நாடாளுமன்றில் எழுத்துமூலம் வழங்கிய பதிலில் கூறியுள்ளதாவது,

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்தியதை பிரித்தானியா வரவேற்கிறது.

போருக்குப் பிந்திய நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு ஒன்றுக்கான ஆக்கபூர்வமான பரிந்துரைகள் பலவற்றை இந்த அறிக்கை கொண்டுள்ளதாக பிரித்தானியா நம்புகிறது. இனமோதலுக்குக் காரணமான ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்து இந்த அறிக்கை பரிந்துரைக்கத் தவறியுள்ளது.

எனினும்இலங்கை அரசாங்கம் உடனடியாக இந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த அறிக்கையின் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலே இலங்கையின் முன்னேற்றத்திற்கான உண்மையான சோதனையாகும்.

சில பரிந்துரைகளை சில மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தலாம். சிலவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் தேவைப்படும்.

போரின் இறுதிக் கட்டத்தில் பொது மக்களுக்கு கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளதை .வரவேற்கிறோம் என்றுள்ளது. (விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

## டெங்குக்கு 30 கோடி


2012 ஆம் ஆண்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் பாலித மகிபால தெரிவித்தார்.

எதிர்வரும் 16-ம்திகதி தொடக்கம் 22-ம் திகதி வரையான பகுதியை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அழுத்தத்துடன் கூடிய சமாதானப் பொங்கலே தேவை

### அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை



தமிழர்களின் திருநாளான தைப் பொங்கல் நாள் சர்வதேச அழுத்தத்துடன் நிரந்தர சமாதானத் தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய சமாதானப் பொங்கலாக அமைய வேண்டும் என்பதே அனைத்து தமிழர்களின் எதிர்பார்ப்பாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

உதிக்கவிருக்கும் தமிழர் திருநாளான தைப்பொங்கல் நாள் தமிழர்களுக்கான நிரந்தர சமாதானத் தீர்வைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர், யுவதிகள் 50 பேர் பொலிஸ் சேவைக்கு

வடக்கு கிழக்கைச் சேர்ந்த 50 தமிழ் இளைஞர், யுவதிகள் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்ரர்களாக பொலிஸ் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான ஆரம்ப கட்டப் பயிற்சி எதிர்வரும் 25-ம் திகதி களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்ரர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த வருடம் முழுவதும் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் இடம் பெற்றது. இப்பதவிக்கென விண்ணப்பித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவின் தீர்மானத்தை மாற்ற காத்திரமான முன்னெடுப்பு அவசியம்

### பிரதமரின் பேச்சாளர் வலியுறுத்தல்




(ரொரன்ரோ)

2013ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டைக் புறக்கணிப்பது என்ற கனடாவின் தீர்மானத்தை மாற்றிக் கொள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான முன்னெடுப்புக்கள் அவசியம்என கனேடியப் பிரதமரின் பேச்சாளர் அன்று மக்டல்க் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் (20ஆம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே...




வர்ணக் கலண்டர் தவறாது கேட்டு வாங்குங்கள்.

அவுஸ்திரேலியா
முற்பணங்கள் இல்லாமல் அவுஸ்திரேலியா
3 மாத காலத்தில் செல்ல
இலவச ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016

சுவிஸ் விசா
சுவிஸிற்கு சுலபமாகச்
செல்வதற்குரிய சட்ட
ஆலோசனைகளிற்கு
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016
(7301)



உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்
TKY07
(7 வயதிற்குட்பட்ட குழந்தைகட்கான ஆங்கிலக் கற்கைநெறி)
புறஜெக்ரர் மூலம் அகலத் திரையில் நவீன கற்பித்தல்
8வது புதிய பிரிவும் ஆரம்பம்: 15.01.2012 பி.ப.2 மணி
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0212219016

# எஸ்.பி. மீது விசாரணை நடத்த ஜே.வி.பி. மாற்றுக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் இணைந்து மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க ஜே.வி.பியின் மாற்றுக்குழுவினர் முயற்சிப்பதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து மிகவும் பயங்கரமானது; பாரதூரமானது.

தேசிய இன ஐக்கியத்திற்கும் நாட்டின் சமநிலைத்தன்மைக்கும் இவரது கூற்று பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என ஜே.விபியின் மாற்றுக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் இத்தகைய கருத்தை வெளியிட்ட அமைச்சர் திஸாநாயக்கவை விசாரணைக்கு உட்படுத்தி அவரது வாக்குமூலத்தை பெற்றுக் கொள்வதற்கு பொலிஸ் மா அதிபர் முயற்சிக்கவேண்டும் எனவும் ஜே.விபியின் மாற்றுக்குழு வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கு கொண்டு உரையாற்றிய அமைச்சர் திஸாநாயக்கா ஜே.வி பியிலிருந்து பிரிந்து செயற்படுபவர்கள் வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுடன் இணைந்து மற்றொரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிப்பதாக தெரிவித் திருந்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே ஜே.வி.பியின் மாற்றுக் குழு நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் குமார இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது மக்களின் குரல் என்ற அமைப்பானது மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

மாணவர்களின் பிரச்சினைகள் வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

மாணவர்களின் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள நாளாந்தப் பிரச்சினைகள் என அனைத்தையும் வெளிக்கொணர்ந்து அவற்றுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

உரிமைப் போராட்டம் எனும் போது அது அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையிலும் ஜனநாயகத்தின் அடிப்படையிலுமே அமைந்திருக்கின்றது.

எமது போராட்டங்களினதும் கோரிக்கை களினதும் வலியுறுத்தல்களினதும் நியாயப்பாடுகளை அறிந்து அதற்கேற்ற வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டியதே சிறப்பானதாகும்.

எனினும் அடக்கு முறை அச்சுறுத்தல் களைக் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசாங்கம் எம்மீது அப்பட்டமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகின்றது.

வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கும் ஒட்டுமொத்த மாணவர் சமூகத்துக்கும் அநீதி இழைக்கப்படுகின்றது.

இதனை கூறினால் எம்மைப் பயங்கரவாதிகள் எனக் கூறி புலி முத்திரையைக் குத்திவிடுகிறார்கள் எம்மீது இவ்வாறான முத்திரைகளை ஒட்டுவதன் மூலம் எமது குரல்களை ஒடுக்கிவிட முடியாது.

இன்று புலிகள் என்று ஒரு அமைப்பு இல்லை எனவும் அது அழிக்கப்பட்டு விட்டது எனவும் அரசாங்கமே கூறுகின்றது.

எனினும் எம்மை அவ்வமைப்புடன் இணைத்துப் பேசுவதன் மூலம் மீண்டும் இனவாதத்தைத் தூண்டிவிடுவதற்கு அமைச்சர் முயற்சிக்கின்றாரா?

அமைச்சரின் கூற்று மிகவும் பயங்கரமானது; பாரதூரமானது. தேசிய ஐக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. எனவே இது தொடர்பில் அமைச்சர் திஸாநாயக்கவை விசாரணைக்கு உட்படுத்தி அவரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸ்மா அதிபர் எடுக்க வேண்டும் என ஜே.வி பி.யின் மாற்றுக் குழு நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் குமார மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

## றோலர் பயன்படுத்திய மீனவர்களுக்கு பிணை

குருநகர் கடலில் றோலர் படகினை பயன்படுத்தி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான 10 பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆட்பிணையில் செல்ல யாழ்.நீதவான் மா.கணேசராசா தீர்ப்பளித்தார்.

பதிவு செய்யப்படாத படகுகள் மூலம் மீன்களைப் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவ்10 பேரும் நீரியல் வள துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 4 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ஒவ்வொருவருக்கும் தலா 7 ஆயிரம் ரூபாயாக 4 பேருக்கும் 28 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக செலுத்துமாறு யாழ். நீதவான் தீர்ப்பளித்திருந்தார்.

இவ்வழக்கு மீண்டும் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## கே.பி.இல்லாமல் வழக்கு விசாரிக்கப்படுமா?

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பிரதம ஆயுத கொள்வனவாளரான குமரன் பத்மநாதனுக்கு எதிரான வழக்கை அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் விசாரிப்பதா இல்லையா எனத் தீர்மானிப்பதை ஏப்ரல் 19ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 'ஒத்தி வைத்தது.

பொன்னையா ஆனந்தராஜா அல்லது ஐயா மற்றும் சுப்பிரமணியம் சிவகுமார் அல்லது ராஜன் ஆகியோருக்கான வழக்கிலேயே நீதிபதி சுனில் ராஜபக்ஷ இந்த அறிவிப்பை விடுத்தார்.

இவ்விரு சந்தேக நபர்களும் அமெரிக்கா,கனடா,மலேசியா நோர்வே, இலங்கை மற்றும் ஏனைய பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக நிதி திரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்விருவரும் கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் நிதிச்சொத்துக்களுக்கு பொறுப்பாக இருந்ததாக சட்ட மா அதிபர் ஈவா வனசுந்தர குற்றம் சுமத்தியுள்ளார் என சிரேஷ்ட அரச வழக்குரைஞர் ரியாஸ் பாரி தெரிவித்தார்.

இரண்டாவது சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கு சிவப்பு அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்குரைஞர் ரியாஸ் பாரி கூறினார். எனினும் இதுவரை அவரை இன்டர் போல் கைது செய்வதற்கு முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ-5)

'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர் (7239)

"கற்பவை கற்க; கற்பவை கசடறக் கற்க"
YAALH ENGLISH ACADEMY
நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
Practical English Courses
♦ ஆசிரியர்க்கு
♦ உத்தியோகத்தர்க்கு
♦ உயர்கல்வி மாணவர்க்கு
♦ A/L படித்தவர்க்கு
♦ தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.
ஆரம்பம் : 21.1.2012 / இலவசம் : முதலிரு வகுப்புக்கள்
முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய : 077 3212 711
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ் நகர் (7238)

## முல்லை மாணவியின் வழக்கு பிரதிவாதிக்கு கால அவகாசம்

(கொழும்பு)

தன்னைப் பல்வைத்திய விஞ்ஞானப்பட்டப்படிப்பை தொடர அனுமதிக்கப்படாமைக்கு எதிராக முல்லைத்தீவைச் சேர்ந்த அனுஜா யோகநாதன் எனும் மாணவி தொடுத்த வழக்கில் பிரதிவாதியான மற்றொரு மாணவி வி.ஜயவதனி ஆட்சேபம் தெரிவிப்பதற்கு பெப்ரவரி 29ம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவை சொந்த இடமாகக் கொண்ட தான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ பட்டப்படிப்பை தொடர்வதற்கு அனுமதிக்காமல் முல்லைத்தீவைச் சேராத ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அனுஜா யோகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அதன் மேலதிக செயலாளர் டாக்டர் பிரியந்த பிரேமகுமார, பல்கலைக்கழக பல் வைத்திய விஞ்ஞானப்பிரிவுக்கு தெரிவான பரீட்சார்த்தியான வி.ஜயவதனி ஆகியோரை அவர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு நகரம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 1989ஆம் ஆண்டு தான் அங்கு பிறந்ததாக மனுதார் அனுஜா யோகநாதன் தெரிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான கடும் மோதலின் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் 12 கி.மீ தொலைவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்திற்கு இடம் பெயர்ந்தனர் எனவும் தான் க.பொ.த உயர்தரப்பரீட்சை வரை புதுக்குடியிருப்பில் தற்காலிக வீடு ஒன்றில் தங்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


மோசமான சூழ் நிலையிலும் 2005ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தான் 8 அதிவிசேட சித்திகளை பெற்றதுடன் 2008ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் க.பொ.த உயர் தரப்பரீட்சை எழுதியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


அந்தத் தடவை மிருக வைத்திய பீடத்திற்கு தான் தெரிவாகுவதற்கு தான் தகுதிபெற்ற போதிலும் மருத்துவபீடத்திற்கு தெரிவாக விரும்பியதால் மீண்டும் பரீட்சை எழுத தீர்மானித்ததாக கூறியுள்ளார்.


முல்லைத்தீவில் க.பொ.த உயர் தரப்படிப்பை மேற்கொண்ட மாணவர்கள் தமது பல்கலைக்கழக அனுமதிக்கு கூடுதலாக முன்னேற்றமடைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் க.பொ.த உயர்தரப்படிப்பை மேற்கொண்ட மாணவர்களுடன் போட்டியிட வேண்டும் என எதிர்பார்ப்பது முறையற்றதும் நியாயமற்றதும் ஆகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஓகஸ்ட் மாத பரீட்சைப் பெறுபேறுகளின்படி மூன்றாவது பிரதிவாதியான ஜயவதனி முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்தியாக உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் தான் பல் வைத்தியத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பார் எனவும் மனுதாரான அனுஜா தெரிவித்துள்ளார். (எ-5)

வீட்டுடன் காணி விற்பனைக்கு
சுதுமலை வடக்கு மதவடி ஒழுங்கையில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:-
0779227300
0773322326
(7278)







ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையினால் நடத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான பாடசாலை மாணவர்களிற்கான பரிசு குலுக்கலில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வின் போது...
(படங்கள் :- போட்டோ ரவி (யாழ்))

01-ம் ஆண்டு நினைவு தினம்
அமரர்
அரியான் பொய்கை கைலாயர் - செல்லத்துரை
அமரர் அரியான் பொய்கை கைலாயர் - செல்லத்துரை அவர்களின் 1-ம் ஆண்டு நினைவு தினம் 14.01.2012 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.



இதனை நினைவு கூருவதில் நிறைவு பெறும்:
கிராம அபிவிருத்திச் சங்கம்,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
கமக்காரர் அமைப்பு, புதரிகுடா மக்கள்,
ஊற்றங்கரை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு.
பரிபாலன சபை, புதரிகுடா. முள்ளியவளை.
(பி-5574)

## இன்று ஒரு தகவல்

# அன்பு

''அன்பாய்'' இருக்க வேண்டும் என்று அநேக பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாங்களும் அதைக் கேட்டு விட்டு அன்பு செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். அதை பெறுவதற்குதான் ஒருவரையும் காணமுடிய வில்லை.

இருந்தாலும் அன்பிலே எத்தனையோ வகை உண்டு. அதை சரியாக விளங்கிக் கொண்டு அதன்பின் அன்பு செலுத்த ஆரம்பிக்க வேண்டும். வகையை புரிந்து கொள்ளாமல் அன்பு செலுத்த ஆரம்பித்தால் வம்பிலே மாட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

அன்பு என்பதை சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. அதிலே எவ்வளவு விதம் இருக்கிறது.

இரக்கம், கருணை, காருண்யம், பந்துத்துவம், பட்சம், பாசம், நேசம், விசுவாசம், அபிமானம், காதல், பக்தி இப்படி பலவிதமாக அதைக் கூறுகிறார்கள்.

இந்த வார்த்தைகளை எல்லாம் நாம் கேட்டது தான். ஆனால், அதில் உள்ள உண்மை என்ன என்பது தெரியாது.

அதனால் இந்த வார்த்தைகளுக்கு பெரியவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

எளியவர்கள் மேலே செலுத்தும் அன்பிற்கு **இரக்கம்** என்று பெயர்.

அறிவு பலம் - சரீர பலம் இது இரண்டும் இல்லாதவர் மேலே அதாவது வலிமையற்றவர்கள் மேலே செலுத்தும் அன்பு என்பது **கருணை** என்று கூறப்படுகிறது.

எறும்பிலே இருந்து யானை வரைக்கும் அதாவது சகல ஜீவராசிகளின் மேலேயும் காட்டும் அன்புக்கு **காருண்யம்** என்று பெயர் கொள்ளப்படுகிறது.

இது ஜீவ காருண்யம்; சிபிச்சக்கரவர்த்தி காட்டிய அன்பு ரகத்தைச் சேர்ந்தது.

உறவினர்கள், சொந்தகாரர்கள், வசதியாக இருந்தாலும் சரி; வறுமையிலே இருந்தாலும் வித்தியாசமில்லாமல் காட்டும் அன்பு அதற்கு பெயர் **பந்துத்துவம்**.

ஒரு எஜமான் வேலையாட்களிடம் காட்டும் அன்பு **பட்சம்** என்று சொல்லப்படுகிறது.

ஒரு தாய் தன் குழந்தை மேலே செலுத்துவது **பாசம்** என்று பொருள்படும்.

ஈருடல் ஒருயிர் என்று நினைப்பதாக எடுத்துக் கொள்ளப்படும் இராமரும் கௌசலையும் இதற்கு உதாரணமாகும்.

தம்மை ஒத்த நண்பரிடம் செலுத்துவது **நேசம்** என்பதாகும். இது கிருஷ்ணன் குசேலரிடம் காட்டிய ரகத்தைச் சேர்ந்தது.

வேலையாட்கள் முதலாளியிடம் காட்டுகிற அன்புக்கு **விசுவாசம்** என்று பெயர் ஆகும்.

தேசத்து மேலேயும் தாய்மொழி பேரிலேயும் செலுத்தும் அன்புக்கு **அபிமானம்** என்று பெயர். ஒரு கணவன்-மனைவி பெயரில் காட்டும் அன்புக்கு **காதல்** என்று பெயர் கொள்ளப்படுகிறது. கடவுள் மேலே செலுத்தும் அன்புக்கு **பக்தி** என்று பெயர். இப்படி அன்பு பல ரகங்களாக இருக்கின்றது. அதிலே வித்தியாசம் தெரியாமல் பழக நினைத்தால் கடைசியாக துன்பம்தான் மிகுதியாக கிடைக்கும்.

சரி... இந்த அன்பைப்பற்றி விஞ்ஞானம் என்ன கூறுகிறது தெரியுமா?

இதயத்தை பாதுகாப்பதற்கு முக்கியமாக தேவையானது ஒன்று இந்த அன்பு தான் என்று கூறுகிறார்கள்.

நெதர்லாந்து விஞ்ஞானிகள் அதை ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துள்ளார்கள். சில முயல் குட்டிகள் இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவிற்கு கொழுப்பு அதிகமாக இருக்கும் உணவை கொடுத்தார்கள். ஏனைய பிரிவுக்கு வெறுமனே உணவை மட்டும் கொடுத்தார்கள்.

அதற்கு முன்பு கூண்டுகளைத் திறந்து விட்டு முயல்களைக் சிறிது நேரம் அன்பு செலுத்திவிட்டு அதன்பின் உணவை ஆராய்ச்சியாளர்கள் வழங்கினார்கள்.

இந்தப் பிரிவுக்கு இருதய பாதிப்பு 60 சதவீதம் குறைவாக இருந்தது. சில நோயாளிகளுக்கு இருதய நோய் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு குணமாகிற சக்தி அதிகமாக இருக்கிறது.

இது எப்படி என்று ஆராய்ந்து பார்த்தார்கள்.

இருதய நோயாளிகள் பல பேரைச் சந்தித்து இருதய நோய் ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்தார்கள். அதற்கு அவர், சாப்பாடு தொடர்பாக எதுவுமே கூறவில்லை.

மனைவி அன்பாக இல்லை. இப்படிப்பட்ட காரணத்தைத்தான் சொல்கிறார்கள்.

அதனாலே இருதயத்தை பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் ஏனையவர்கள் அன்பாக இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும். இது தான் முக்கியமானதாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கைத்தொழில் அதிகாரசபையால் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற நிலையங்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். இக் கற்கை நெறியினை தொடர்வதற்கு க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளிட்ட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி பெறுவதுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியன்று விண்ணப்பதாரி 16 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

இக் கற்கை நெறியினை கற்பதற்கு தகுதி உடையவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், நைற்றா இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (NCICT) இற்கான விண்ணப்பம் என தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும் என மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார். (அ-7)

---

### ❊ (கிளிநொச்சி)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் (NAITA) கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என தொழிற்பயிற்சி அதிகார சபை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதில் நீர்க்குழாய் பொருத்துதல், தன்னியக்க வாகன திருத்துநர், விவசாய உபகரணங்கள் திருத்துநர், தொலைக்காட்சி, வானொலி திருத்துநர், பிரத்தியேக செயலாளர், தாதிய உதவியாளர் ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு தகுதியானவர்கள் சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவத்தை தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 034 3942824 அல்லது 021 2285615 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை அறிவித்துள்ளது. (அ-7)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 50-100 | 50 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 170 |
| தக்காளி | 65 | 90 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 110 | 100 |
| பூசணி | 50 | 60 | 60 |
| புடோல் | 40 | 80 | 80 |
| வாழைக்காய் | 40-50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 |
| பீற்றூட் | - | 120 | 110 |
| கறிமிளகாய் | 160 | 290 | 230 |
| முருங்கைக்காய் | - | - | -- |
| போஞ்சி | 90 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-70 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

## இராசி பலன்

*14.01.2012*
*(மார்கழி 29, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு*
*பஞ்சமி காலை 8.37 மணிவரை*
*உத்தரம் பின்னிரவு 2.53 மணிவரை*
*இராகுகாலம் 9.34-11.04 மணிவரை*
*சுபநேரம் 3.34-5.04 மணிவரை*

**மேடம்** கடுமையான எதிர்புகள் கூட சாதகமாகிவிடும், தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள், எடுத்த காரியம் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**இடபம்** பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், புதிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** தாய்வழி உறவினர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கலாம், பாராட்டும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், காரிய சித்தியுண்டு.

**கடகம்** வெற்றி வாய்ப்புக்கள் வீடு வந்து சேரும் நாள், தடைப்பட்ட காரியங்களில் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

**சிங்கம்** எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், சிறப்பான நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** வரவுக்கேற்ப செலவுகள் உருவாகும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், பெரியவர்கள் சந்திப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், தாராளமாகச் செலவுகள் செய்து மகிழ்வீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புகழ் கூடும், உள்ளம் மகிழும் விதத்தில் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**தனுசு** சொல்லை செயலாக்கி காட்டும் நாள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடரும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், கௌரவமான நாள்.

**மகரம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கூட்டு முயற்சி வெற்றி தரும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**கும்பம்** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, தொழிலில் கவனம் தேவை, எடுத்த காரியங்கள் தாமதமாகும், போசன சுகமுண்டு, உடல் நலனில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**மீனம்** இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், கௌரவமான நாள்.

வளவன்

## கால்கோள்விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு அனுமதிபெற்ற மாணவர்களுக்கான கால்கோள்விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அ. அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி ஆசிரியை பகவதியம்மா தம்பித்துரை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்விற்கான ஆசியுரையினை கோட்டக் கல்விப்பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் ஆற்றவுள்ளார். (அ-7)

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி இம்முறை துரையப்பா விளையாட்டரங்கில்

## மூன்று நாட்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி இம்முறை எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மிகப் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள், சேவைகள் நிறுவனம் மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் ஆகியன இணைந்து இவ்வர்த்தக கண்காட்சியினை ஏற்பாடு செய்கின்றன.

தொழில் முயற்சியாளர்களும் உற்பத்தியாளர்களும் தமது வியாபாரத் தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கு இதனை ஒரு சிறந்த களமாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் தொடர்புகளை வலுப்படுத்தி சந்தை வாய்ப்புக்களை நேரில் மதிப்பீடு செய்வதன் மூலம் நிறுவனங்கள் தமது வியாபாரத்தை விரிவு படுத்த முடியும்.

யாழ்ப்பாணம் இப்பொழுது முழு உலகுடனும் தொழில் பங்காளித்துவங்களை ஏற்படுத்திக் கொள்வதிலும் புதிய வியாபாரத் திட்டங்களை ஆரம்பிப்பதிலும் தீவிர கவனத்தை செலுத்துகின்றது. எதிர்வரும் காலங்களில் அது உலக வர்த்தகத்தில் ஓர் வலிமையான நிலையை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கண்காட்சியில் கட்டடப் பொருட்கள், நிர்மாண மற்றும் உள்ளக அலங்காரப் பொருட்கள், பதனிடப்பட்ட உணவு மற்றும் விவசாயப் பண்டங்கள், உணவும் குடிபானங்களும் பொதியாக்கம், இயந்திரங்கள், ஒப்பனை மற்றும் அழகியல் சாதனங்கள், மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், புடைவைகள் மற்றும் ஆடைகள், அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப்பொருட்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், கைப்பணிப்பொருட்கள், கனரக சாதனங்கள் மற்றும் கருவிகள், உடல்நல மற்றும் சுகாதார நல பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், கைத்தொழில் உபகரணங்கள், குளியலறை உபகரணங்கள், காகிதாதிகள் முதலியன அவற்றுள் அடங்கும்.

இக் கண்காட்சி மூலம் நாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரச் சமூகத்தினரும் ஒரு அணியாக இணைவதற்கு உந்து சக்தி பெறுவார்கள்.

ஒரு நூற்றுக்கணக்கான தொழில் முயற்சியாளர்கள் இம்முறையும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குபற்றுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கில் புதிய வியாபார வாய்ப்புக்களைத் தேடுவோருக்கு யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி-2012 ஒரு சிறந்த வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை என கண்காட்சியின் ஏற்பாட்டுக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## கலைஞர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் கலைஞர்களின் தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது. இதில் கலைஞர்களை இணைத்துக் கொள்வதற்காக குறித்த கலைஞர்கள் எந்தெந்த கலைத்துறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதனை, தொலைபேசி இலக்கத்தையும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் ஒப்படைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார்.

இதில் இலக்கியம், நாடகம், நாட்டுக் கூத்து, நடனம், இசை, ஓவியம், சிற்பம், ஆகிய கலைத்துறைகளை சார்ந்த கலைஞர்களின் தொகுப்பு உள்ளடக்கப்படவுள்ளது. இவற்றுக்கான மேலதிக விபரங்களை மேற்படி பிரதேச கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளமுடியும். (அ-7)




## சந்தேகநபருக்கு உதவியவர் நிபந்தனையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி இரட்டைக்கொலை வழக்கின் சந்தேகநபர் தலைமறைவாகுவதற்கு உதவிய இருவரில் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத்தால் நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த இடத்தில் கணவன்-மனைவி இருவரினையும் வெட்டிக் கொன்றார் என்ற சந்தேகநபர் தலைமறைவாக வாழ்வதற்கு வீடு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதாகியிருந்தனர்.

இவ்வழக்கு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் குறித்த நபர்களில் ஒருவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

மற்றைய நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு மீண்டும் இம் மாதம் 21 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-4)

## இலவச கலைப்பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் மாணவர்களுக்கான இலவச கலைப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் நாளை ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் பெற்றோருடன் வருகை தந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என கலாமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

இம் மன்றத்தினால் அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும், மாலைகட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல், யோகாசனம், தியானம் மற்றும் யோகாசனம், தியானம் ஆகிய பயிற்சி நெறிகள் வயது, பால் வேறுபாடின்றி கற்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## தீவக கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்தின் யாழ்.எழுவைதீவு றோ.க.த.க பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடத்திற்கு வேலணை தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ஜி.வி.ராதாகிருஷ்ணனால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதிபர் சேவையை சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காதபோது இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, தரம்2-I, இனைச் சேர்ந்த தீவகக்கல்விவலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

இப் பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-7)

## இறுவெட்டு வெளியீட்டு விழா

கருணை வள்ளல் இணுவை செகராச சேகர ஐங்கரனே இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தமிழருவியின் பிரதம ஆசிரியர் ம.பா. மகாலிங்கம் தலைமையில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது என ஆலய தர்மகத்தா சபை அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சிவஸ்ரீ உருத்திரமூர்த்திக்குருக்கள், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனும் வாழ்த்துரையினை யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறை தலைவர் பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடமுன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா ஆகியோரும், வெளியீட்டுரையினை சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

முதற்பிரதியினை சி. சுந்தரலிங்கம் வழங்க டாக்டர் க. பாலசுப்பிரமணியம், அண்ணா தொழிலக அதிபர் பொ. நடராஜா, பெஷன் ஹவுஸ் த. கந்தசாமி ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இவ் இறுவெட்டுக்கான இசையினைஅக்கினி இசைக்குழுவும் பாடல் வரிகளை கலாபூசணம் வீரமணிஜயர், த.கேதீஸ் ஆகியோர் எழுதியுள்ளனர்.

இப்பாடல்களை ரி.எல். மகாராஜன், முகேஸ், அனுராதாஸ்ரீராம், கரிஸ்ராகவேந்திரா ஆகியோர் பாடியுள்ளமை சிறப்பம்சமாகும். (அ-7)







யாழ். பொலிஸ் நிலைய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தியமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அடிக்கல் நாட்டுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ. சாளின்)

# நிறைவேற்று அதிகாரத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த அதிக ஆர்வம் காட்டினார்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் கடந்த 1978 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை அதிகரித்து கொள்வதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆர்வம் காட்டியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.**

நிறைவேற்றுஅதிகாரத்தை இரத்து செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்த போதிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் அதிகாரத்தை கூட்டிக் கொள்வதில் ஜனாதிபதி நாட்டம் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி அப்போதைய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபட் ஓ பிளேக்கினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களுத்திற்கு இந்த தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ராஜபக்ஷ சகோதரர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருவதாக அந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்கள், பிரதிநிதி அமைச்சர்கள் அரசாங்கத்தில் பதவி வகித்தாலும் ராஜபக்ஷ சகோதரர்களே முக்கிய தீர்மானங்களை எடுக்கின்றனர்.

மிக முக்கியமான நிதி, பாதுகாப்பு போன்ற அமைச்சுக்களை ஜனாதிபதியே நேரடியாக நிர்வாகம் செய்கின்றார்.

தேசிய வரவு செலவுத்திட்டத்தின் 60 சதவீதமான நிதி ஒதுக்கீடுகளை ஜனாதிபதி நிர்வாகம் செய்கின்றார்.

கொழும்பு பணக்கார முக்கிய பிரபுக்களை ராஜபக்ஷ சகோதரர்கள் தமது நடவடிக்கைகளில் குறிப்பாக கொழும்பு 7 ஐச் சேர்ந்த பணக்கார புத்திஜீவிகளுடன் மிகவும் குறைந்தளவான உறவினையே ஜனாதிபதி பேணுகின்றார் என அமெரிக்கத் தூதுவர் பிளேக் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# தரவட்டச் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரை விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவு, திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெறும் தரவட்டச்செயலமர்வில் கலந்துகொள்ள வேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்விற்கு வரும் ஆசிரியர்கள் 2012 ஆம் ஆண்டிற்கான வகுப்பு ரீதியான செயற்றிட்டம், 2011 ஆம் ஆண்டில் ஆய்வுகூடப் பாவனை பற்றிய அறிக்கை, 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண வினாத்தாள் பற்றிய அறிக்கை, 2012 ஆம் ஆண்டிற்கான பாடசாலை நாட்காட்டி என்பவற்றை கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (அ-7-15)

# இந்திய நாட்டின் கடல் எல்லையை முதலில் வரையறுக்க வேண்டும்

## மீனவர்களின் வாழ்வுக்கு இதுவே வழி என்கிறார் சீமான்

தமிழக மீனவர்கள் தாக்கப்படாமல் இருப்பதற்கு இந்திய நாட்டின் கடல் எல்லையை முதலில் வரையறுக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் மைத்துனரைத் தாக்கியதாக கைது செய்யப்பட்டு இராமேஸ்வரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நாம் தமிழர் கட்சியினர் 11 பேரை அவர் நேற்று நேரில் சந்தித்து பேசினார். அதன்பின் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்,

554 மீனவர்களைச் சுட்டுக்கொன்று தினமும் தமிழக மீனவர்களை துன்புறுத்தி வரும் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்தியா வரும் போது சிவப்பு கம்பள வரவேற்பு கொடுக்கப்படுகின்றது. நான் திருடவில்லை,கொலை செய்யவில்லை, தவறு எதுவும் செய்யாத என்னை விமான நிலையத்தில் வைத்து அமெரிக்கா திருப்பி அனுப்பியது.

தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்றவர்கள் நமது நாட்டுக்குள் சர்வ சுதந்திரமாக வந்து செல்கின்றனர். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் மைத்துனர் திருக்குமரன் நடேசன் இராமேஸ்வரம் வரும்போது நாம் தமிழர் கட்சியினர் ஜனநாயக முறைப்படி எதிர்ப்பு தெரிவித்தனர். அவரை யாரும் தாக்கவில்லை. இதை அவரே செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். அப்படி இருக்கையில் காங்கிரஸ் கட்சியினர் சிலர் இதை அரசியலாக்குகின்றனர் என தனது பேட்டியில் தெரிவித்தார். (அ-2)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ்

# மின்சார விநியோகத்திற்கு கட்டணம் அறவிடப்படுமா?

## தெளிவுபடுத்த மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வன்னி மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையுடன் இணைந்து பலகோடி ரூபா செலவில் மின் இணைப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்பை பெறுகின்ற குடும்பத்தினர் தமது வீட்டிற்கான இணைப்பை பெற 14 ஆயிரத்து 710 ரூபாவை செலுத்த வேண்டும்.

பிரதான மின் கம்பத்திலிருந்து வீடு வரையான தூரம் 50 மீற்றருக்குள் அமைந்திருப்போருக்கே இக் கட்டணம் அறவிடப்படுகின்றது. தூரம் அதிகரிக்கும்போது கட்டணத்தின் தொகையில் அதிகரிப்பு ஏற்படும்.

இவர்களுக்கு வழங்கப்படும் மின் பாவனைக் கட்டணமானது ஆறு மாதத்திற்கு இலவசமாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மின் இணைப்பு வழங்கப்பட்ட வீடுகளுக்கு இலங்கை மின்சார சபையின் மின் வாசிப்பு அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று மின் பாவனை [illegible]கு, அவர்கள் செலுத்த வேண்டிய தொகை என்பவற்றை குறித்து சிட்டையினை வழங்கி செல்கின்றனர்.

இவ்விடயத்தில் குழப்பமடைந்த நிலையில் மக்கள் உள்ளனர். வடக்கின் வசந்தம் மூலம் மின்சாரம் தமக்கு இலவசமா? அல்லது மின்சார சபைக்கு கட்டணம் செலுத்த வேண்டுமா? எனத் தெரியாமல் விழிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் உடன் தலையிட்டு தமக்கொரு தீர்வினைப் பெற்றுத் தருமாறு பொதுமக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7-15)

# ஒரிசாவில் பறவைக்காய்ச்சல் நோய் வேகமாக பரவுகிறது!

## கோழிகள்,முட்டைகள் அழிப்பு

(கொழும்பு)

ஒடிசா மாநிலம் குர்டா மாவட்டத்தில் பறவை காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகிறது. ஏனைய மாவட்டங்களுக்கும் இந்நோய் பரவும் முன்பு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட்டது.

குர்டா மாவட்டத்தில் ஏராளமானகோழிப் பண்ணைகள் உள்ளன. அங்குள்ள பண்ணைகளிலும் பெரும்பாலும் கறிக்கோழிகளே உற்பத்தி செய்யப்படுகின்றன.

மத்திய அரசின்ஆலோசனையின்படி இந்த மாவட்டத்துக்கு அதிரடி நடவடிக்கை குழு அனுப்பி வைக்கப்பட்டது. கேரங்கா பகுதியில் உள்ள தனியார் கோழிப்பண்ணைக்குச் சென்ற இக்குழுவினர் நோயால் பாதிக்கப்பட்ட 4 கோழிகளையும் ஆயிரக்கணக்கான முட்டைகளையும் அழித்தனர். பூமியை ஆழமாக தோண்டி அதில் போட்டு அவை புதைக்கப்பட்டன.

கால்நடை மருத்துவ குழுவும் அங்கு முகாமிட்டு நோய் பரவாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. கேரங்கா தாலுகாவில் 19 கிராமங்களில் கால்நடை மருத்துவ குழுவினர் நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் மட்டும் 35 ஆயிரம் கறிக் கோழிகளை அழிக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. (அ-2)

# வாழும் கலைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் சுதர்சன கிரியா வாழும் கலைப்பயிற்சி-1 நெறி பற்றிய இலவச அறிமுக உரை நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அராலி வடக்கு, செட்டியார் மடம் வாழும் கலை நிலையத்தில் நடைபெறவுள்ளது என நிலையம் அறிவித்துள்ளது.இப் பயிற்சி நெறிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரையும் இடம்பெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்புக்கள் காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரையும் பின்னர் மாலை 4.30 மணிமுதல் 6.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இதன்போது வாழும் சுதர்சன கிரியா எனும் சக்தி வாய்ந்த மூச்சுப் பயிற்சியும் எளிமையான யோகாசனங்கள், தியானங்கள், பிராணாயாமம் ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியதாகும். இப்பயிற்சி மையமானது வடகிழக்கிலங்கையின் முதலாவது வாழும் கலை நிலையம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி வடக்கு செட்டியார் மடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் நிலையத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (அ-7)


ஓம் விராட் விஸ்வ பிரமனே நமக

# நன்றி நவில்கின்றோம்

கலாபூசணம் விருது பெற்ற சிற்பக்கலைஞர் கோண்டாவில் தாவடியூர் விஸ்வபிரம்ப ஸ்ரீ சின்னத்தம்பி நாகராசா அவர்களை பாராட்டி 10.01.2012 அன்று தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் பாராட்டுவிழாவிற்கு வருகைதந்த இசைக்கலைஞர்கள், கலாரசிகர்கள், அந்தண சிரேஷ்டர்கள் மற்றும் அருளுரை வழங்கிய நல்லை ஆதீன குருமணி, ஆசியுரை வழங்கிய சிவாச்சாரியார்கள், பாராட்டுரை வழங்கிய நல்லூர் பிரதேச செயலர் மற்றும் கலாசாரப்பிரிவைச் சேர்ந்தோர், தலைமைவகித்த கோப்பாய் சிவம் அவர்களையும் இசை விருந்தளித்த இந்திய இலங்கை தவில், நாதஸ்வரக் கலைஞர்களையும் விழா நாயகர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டபோது பூரண கும்ப மரியாதைகள் செய்து உபசரித்த எங்கள் ஊர் அன்பர்களுக்கும், பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்த அன்புள்ளங்களுக்கும், பாராட்டு மடல் வழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இப் பெருவிழாவை ஏற்பாடு செய்து வெகு சிறப்பாக எம்மைக் கௌரவித்து **பேரீ வாத்ய விஸ்வ பிரமன்** என்னும் விருதும் வழங்கி மகிழ்வித்த அகில உலக தவில் நாதஸ்வர கலைஞர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாபூஷணம் சி. நாகராசா
குடும்பத்தினர்

# வெளிநாட்டவர்களின் வருகை யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு!

## கூடவே நோய் தாக்கங்களும்...!

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து யாழ். குடா நாட்டிற்கு வருவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

அமைச்சின் அனுமதியுடன் யாழ். மாவட்டத்திற்கு வருகை தருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வடமாகாண ஆளுநர், யாழ். ஆயர், யாழ். அரச அதிபர் போன்றோரை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபடுகின்றனர்.

இதுதவிர சுற்றுலாப் பயணிகளாக வரும் வெளிநாட்டவர்கள் துவிச்சக்கரவண்டிகளில் பலர் புகைப்படக் கருவியுடன் வீதிகளில் பயணிப்பதை காணமுடிகின்றது.

அத்தோடு யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள், மக்களின் கலாசார நிகழ்வுகள், வாழ்விடங்கள் போன்றவற்றை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தி வருகின்றனர்.

இதுதவிர வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மக்களையும் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறிவரும் மக்களையும் சந்தித்து கலந்துரையாடுகின்றனர்.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் யாழ். குடாநாட்டின் நிலவரங்களைத் அமைச்சர்களின் அனுமதியுடன் வரும் வெளிநாட்டுப்பிரதிநிதிகள் துருவித் துருவி ஆராய்ந்து வரும் நிலையில் சுற்றுலாப் பயணிகளாக வரும் வெளிநாட்டவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்கையில் குடாநாட்டில் கட்டுப்பாட்டில் இருந்து வந்த நோய்கள் தற்போது தலை தூக்கியுள்ளது.

குறிப்பாக மலேரியா நோய் மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அண்மையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே டெங்கு, தைபோயிட் போன்ற காய்ச்சல் வகைகள் தீவிரமடைவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் மலேரியா மீண்டும் ஏற்படுமாயின் பாரிய விளைவுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இதுதவிர சுகாதாரத் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட ஊடக அறிகையில் வெளிநாட்டவரின் வருகையால் தான் மலேரியா நோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர குடாநாட்டில் வீட்டு வாடகை மற்றும் அறை வாடகைகள் அதிகரித்து உள்ளது. அத்தோடு ஹோட்டல்களில் அதிக பணத்தை கொடுத்தே அறைகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் வெளிநாட்டவர்களின் வருகை கடந்த 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் இவ்வாறு அதிகரித்து காணப்பட்டது.

பின்பு யுத்தத்திற்கு பின்னரான இந்தக் காலப்பகுதியிலும் வெளிநாட்டவர்களின் வருகை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

## செயற்குழு நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய செயற்குழு நிர்வாகத் தெரிவு செய்யப்பட்டது. அவர்களின் விபரம் வருமாறு,

இச்செயற்குழுவின் தலைவராக க.இராசலிங்கம்,உப தலைவர் திருமதி மலர்விழி ஸ்ரீகந்தராசா,செயலாளர் செ.ஜெயகாந்தன்,உபசெயலாளர் த. அருணகிரிநாதன், பொருளாளர் சொ.சிவயோகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என செயலாளர் வே.இராசரெத்தினம் அறிவித்துள்ளார். (அ)

# தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் சிங்களவர்கள் வாழும் பகுதிகளில் நிறைவேற்றப்படும் புகையிரத திட்டங்களுக்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளிக்கும் மத்திய அரசு எங்கள் நாட்டில் இயற்கை பேரிடரால் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ள மக்களுக்காக வெறும் 500 கோடியை மட்டும் ஒதுக்கியுள்ளதாக சீமான் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தை நீக்க உடனடியாக நிவாரணமாக ரூபா 2 ஆயிரம் கோடியை அளித்து அதனை பொங்கல் திருநாளிற்கு முன்னர் மக்களை சென்றடையும் வகையில் அளித்திட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக் கொள்கிறது என்று சீமான் கூறியுள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, தானே புயலால் கடும் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட மத்திய அரசு அறிவித்துள்ள ரூபா 500 கோடி இடைக்கால நிவாரணம் மிகவும் குறைவானதாகும்.

தானே புயல் ஏற்படுத்திய பாதிப்பினால் கடலூர், விழுப்புரம், நாகை உள்ளிட்ட பல மாவட்டங்களில் வாழ்ந்து வரும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பும் ஏழை, எளிய மக்களின் வாழ்விடங்கள், புயல், மழையால் சிதைவுக்குள்ளாகியுள்ளதும் அங்கு இயற்கை ஏற்படுத்திய பேரிடர் ஆக அறிவிக்க வேண்டும் என்று கூறி ஒட்டுமொத்த இழப்பு 5 ஆயிரத்து 175 கோடி ரூபாய் என்றும் அதனை முழுமையாக வழங்கிட வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளது.

இந்த நிலையில் மத்திய அரசு இடைக்கால நிவாரணமாக வெறும் ரூபா 500 கோடியை அறிவித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது.

மத்திய குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் 50 சதவீத்தை இடைக்கால நிவாரணமாக உடனடியாக வழங்கிட மத்திய அரசு முன்வர வேண்டும் என அவ் அறிக்கை கூறுகிறது. (அ-2)

# ஊழியர்களின் சம்பளத்தை கொள்ளையிட அரசாங்கத்திற்கு இடமளிக்க முடியாது

## பெ.கூ.சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்துள்ள 18 வீத சம்பள உயர்வு மற்றும் இரண்டாயிரத்து 500 ரூபா கொடுப்பனவு ஆகியவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தேசிய ஊழியர் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்தவிடயம்தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்றைமேற்கொள்ளவுள்ளதாகசங்கத்தின்செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைகளின் பிரகாரம் கட்டாயமாக 35 வீத சம்பள உயர்வு தேவை எனவும் அவர் கூறினார். மின்சார சபை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள 18 வீத சம்பள உயர்வு மற்றும் மேலதிக கொடுப்பனவு ஆகியவற்றை ஏனைய தொழிற்சங்கங்களை போன்று தாமும் நிராகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாம் சம்பள உயர்வை மாத்திரமே கோரியதாகவும் கொடுப்பனவுகளை கோரவில்லை எனவும் சங்கத்தின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்திடம் உரிய நடவடிக்கைகள் இன்மையினால் குறித்த மூன்று நிறுவனங்களும் மூட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் ஊழியர்களின் சம்பளத்தை கொள்ளையிட அரசாங்கத்திற்கு இடமளிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் நேற்று நடைபெறவுள்ள கலந்துரையாடல் வெற்றியளிக்காத பட்சத்தில் தாம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து பெற்றோலிய வளத்துறை அமைச்சிடம் வினவிய போது, தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டதாக கூறினார்.

குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சு மேலும் குறிப்பிடுகின்றது. (அ-2)



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட கோட்டை ஆனந்த சாஸ்த்ராலய வித்தியாலயத்தின் மைதான திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மைதானத்தில் கட்டப்பட்டுள்ள நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்வதைப் படத்தில் காணலாம்.

# வடக்கில் ஆயுத போராட்டத்திற்கான புறச்சூழலை அரசு உருவாக்குகிறது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

வடக்கில் இடம் பெற்றுவரும் ஜனநாயகம் இன்மை, இராணுவ ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மறுத்தல் உள்ளிட்ட விடயங்களை தொடர்ந்தும் நீடித்து வருகின்ற அரசாங்கம் வடக்கு மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக அங்கு மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கான புறச்சூழலை அமைத்து வருவதாக ஜே.வி.பி. அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளது.

புலிகளின் ஆயுதம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் நந்திக்கடலுடன் நிறைவுக்கு வந்து விட்டது. அவ்வாறான ஒரு பயங்கரவாதம் எதிர்வரும் காலங்களில் நாட்டில் தோற்றம் பெறும் என்பதில் நம்பிக்கை கிடையாது. அரசாங்கமே வீணான கதைகளை பேசி அப்பட்டமான விடயங்களை கூறி குழப்பங்களை ஏற்படுத்துகின்றது என்றும் அக்கட்சியின் அநுர குமார திசாநாயக்க எம்.பி. நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கில் இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் இதுவரையில் 450 வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் முழுமையான பயன் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் 4 ஆம் தலைமுறைக்கு சென்றடையும் நிலையும் உருவாகியுள்ளது என்றும் அவர் கூறினார். (அ-2)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் திடீரென இடமாற்றப்பட்டனர்

(கொழும்பு)

17பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாத்தறை, பேருவளை, அளுத்கம, பெந்தோட்டை, மகாவெல, நானுஓய மற்றும் உட்புசல்லாவ பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இடம்மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிட பலாங்கொடை, பேலியகொடை, வீரக்கெடிய, அக்மண, வெலிகந்த, கல்கிஸ்ஸ, கதிர்காமம், கெக்கிராவை மற்றும் திக்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் மாற்றப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நலன்புரி பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பாதுகாப்பு கமரா பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# எஸ்.பி.யின் கருத்துக்கள் குறித்து அலட்டிக் கொள்ள தேவையில்லை

## சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் கருத்து

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவினால் யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட பயங்கரவாதம் தொடர்பிலான கருத்துக்கள் குறித்து தமிழ் மற்றும் சிங்கள அரசியல் கட்சிகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

ஜே.வி.பி. மாற்றுக்குழு வடக்கு,கிழக்கு மற்றும் தெற்கின் இளைஞர்- யுவதிகளை இணைத்துக்கொண்டு ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகி வருவதாக அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கடந்த 11 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி.ஆகிய கட்சிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

கட்சிகள் கூறியவை வருமாறு,

இதுகுறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாவை சேனாதிராஜா எம்.பி. கூறுகையில்,

வடக்கு கிழக்கை சேர்ந்த எமது இளைஞர் யுவதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கில் இல்லை.

இந்நிலையில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க யாழ்.பல்கலைக்கழகத்தில் தெரிவித்த கருத்துக்கள் தேவையற்றதாகும். இது குறித்து நாம் அலட்டிக்கொள்ள தேவையில்லை.

மேலும் எந்தவொரு தரப்பினரும் மீண்டும் நாட்டில் ஆயுதப் போராட்டத்திற்கு வழி வகுப்பர் என்று நம்புவதற்கு இல்லை என்றார். இதேவேளை ஜே.வி.பி.பிரசார செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான விஜித ஹேரத் கூறுகையில்,

பாடசாலை முதல் பல்கலைக்கழகங்கள் வரையில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை முன்வைக்க முயலாது எதிர்ப்பாளர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்துவதன் மூலம் விவகாரங்களை மூடி மறைக்கவே அரசு முயற்சிக்கின்றது.

இதனை இன்றைய அமைச்சர்கள் மிகச் சரியான முறையில் அரங்கேற்றி வருகின்றனர். அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும்.

பிரச்சினைகளை வெளிக்கொணர்வோர் மீது பயங்கரவாத முத்திரை குத்தி அவர்களை தவறானவர்கள் என்று சித்தரிப்பதும் அரசாங்கத்திற்கு நல்லதல்ல. இருக்கின்ற பிரச்சினைகளை மேலும் அதிகரித்துக் கொள்ள வேண்டாம் என்று நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (அ-2)

## த.தே.கூட்டமைப்பினர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தென்னாபிரிக்கா சென்றிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் கடந்த வியாழக்கிழமை நாடுதிரும்பியுள்ளனர்.

தென்னாபிரிக்கா தேசிய காங்கிரசின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தூதுக் குழுவொன்று கடந்த 3 ஆம் திகதி தென்னாபிரிக்கா சென்றிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் சென்ற இக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சென்றிருந்தனர். (அ-2)

## பொதியிடப்பட்ட உணவுப்பொருட்களின் எடை தொடர்பில் ஆராய தீர்மானம்

பொதியிடப்பட்ட உணவுப் பொருட்களில் உரிய எடை உள்ளதா என்பது தொடர்பில் ஆராயும் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அளவைகள், பிரிவு, தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பொதிசெய்யப்பட்ட உணவு பொருட்களில் உரிய எடை காணப்படுவதில்லையென நுகர்வோரிடமிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கே.எச். பிறேம சிறிகுமார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொதிசெய்யப்பட்ட அரிசி மூடைகளிலேயே இந்த நிலையை காண முடிவதாகவும் போத்தலில் அடைக்கப்பட்ட திரவங்களில் உரிய கொள்வனவு காணப்படுவதில்லையென முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இவை குறித்து மாவட்ட மட்டத்தில் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதாக தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அது தொடர்பிலான முறைப்பாடுகளை 0112587199 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது மாவட்ட அலுவலகத்திற்கோ அறிவிக்குமாறும் திணைக்களத்தின் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## ஆறு மாணவர்களுக்கு இருவருட வகுப்புத் தடை

(கொழும்பு)

உபவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரை பலவந்தமாக பல்கலைக்கழகத்திற்குள் தடுத்து வைத்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஆறு பேருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அமுலாகும் வகையில் விதிக்கப்பட்ட இந்த வகுப்புத்தடை எதிர்வரும் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும் என அந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.ஜீ கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் மாணவர்கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் பதிவாளர் கூறினார்.

இரண்டு வருட வகுப்புத் தடை விதிக்கப்படும் முன்னர் அவர்களுக்கு ஏற்கனவே ஆறு மாதகால வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

## 350 பேருக்கு காசநோய் தாக்கம்!

## யாழில் காச நோய் ஆய்வுக்கூடம் இதுவரை அமைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

காசநோயின் தாக்கத்தினால் 350 பேருக்கு மேல் பாதிப்படைந்துள்ளதோடு கடந்த வருடத்தில் மட்டும் 12 வயதுக்குட்பட்ட 5 சிறுவர்கள் யாழ். மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுவைத்திய அதிகாரி சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

காசநோய் மனித உரிமை அணுகுதல் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். பண்ணைவீதியிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நூலின் வெளியீட்டுரையினை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் இதுவரை 350 பேர் காசநோய் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதில் 12 வயதுக்குட்பட்ட 5 பேருக்கு கடந்த வருடத்தில் மட்டும் இந்த நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காசநோய்க்கான ஆய்வுகூடம் இதுவரை அமைக்கப்படவில்லை. வடமாகாண சுகாதார அமைச்சு பாரபட்சமாக நடப்பதால் இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தவிர கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் தீவிரமடைந்து வருகின்றது.

இந்த மாவட்டங்களில் காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய நிபுணர்கள் நியமிக்கபடவில்லை.

கடந்த கால யுத்தத்தினால் இப்பகுதி மக்கள் அதிகளவில் பாதிப்படைந்து இருக்கின்றனர். இந்நிலையில் காசநோய் தொற்றும் தீவிரமடைந்து வருகின்றது.

அத்தோடு இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் இந்த நோய் தாக்கம் அதிகளவில் ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கு தனியான முறையில் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பொது மக்க க்கு அவ்வாறு இல்லை.

எனவே மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந்தநோய் மேலும் தீவிரமடைவதை தடுக்க முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சகோதரிகளுக்கு விளக்கமறியல்

போலியான தங்க ஆபரணங்களை அடகு வைத்து ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிக மோசடி செய்த சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரஹல ரணசிங்க தலைமையில் இடம் பெற்றது. ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரிகளுக்கே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் அடகு வைக்கப்பட்ட வளையல் ஒன்றை பரிசோதனை செய்யும் போதே அவை போலியான தங்கமென கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்த வழக்கினை கொலன்னாவை அரச வங்கிக் கிளையொன்றில் முகாமையாளர் தாக்கல் செய்திருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (அ-2)

## இலங்கை - கட்டாரிடையே சட்டத்துறை உடன்படிக்கை

### நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் கட்டார் அரசாங்கத்துக்கும் இடையே சட்டத்துறை தொடர்பில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கட்டார் அமீர் ஷேக் ஹமட் பின் கலீபா அல் தானியின் இலங்கை விஜயத்தின் போது இந்த அவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்கான அங்கீகாரத்தை கடந்த புதன்கிழமை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின்மூலம் இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதுடன் சட்ட நிபுணர்களை இரு நாடுகளுக்குமிடையே பரிமாறிக் கொள்ளல் உட்பட பல விடயங்களை இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் கட்டாருக்குமிடையே நல்லுறவு நிலவி வருவதோடு பொருளாதார தொழில்நுட்ப ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தக துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது. பெரும் எண்ணிக்கையிலான இலங்கை தொழிலாளர்கள் கட்டாரில் வேலைவாய்ப்பு பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பல்கலைக்கழக பிரச்சினை குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

பல்கலைக்கழகங்களில் குழப்பத்தை ஏற்படுத்த சில திட்டமிட்ட குழுக்கள் முயற்சி செய்து வருவதாகவும் அவ்வாறான குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை களை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவர்களை ஆத்திரமூட்டி அதன் மூலம் கிளர்ச்சிகளை வெடிக்கச் செய்ய சிலர் முயற்சிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

சப்ரகமுவ, றுகுணு, ஜயவர்த்தனபுர, பேராதனை, ரஜரட்ட மற்றும் களனி போன்ற பல்கலைக்கழகங்களில் இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழகங்களில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி செய்பவர்கள் பற்றி தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

17-III



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்




***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்- மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்*** **என்னும் முத்தாய்ப்பான முதுமொழிக்கிணங்க உழவர்களையும் உழவுத் தொழிலையும் நேசிக்கும் அனைவருக்கும் பசுமையின் குரலால் எழுதும் இக்கரங்களின் இனியதைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.** தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதனை கட்டியங்கூறிக் கொண்டு இம்முறை கரவருடம் பிறந்திருக்கின்றது. பசுமையின் மனங்கொண்டு பசுமையின் நிறங் கொண்டு நாமும் தைமகளை வரவேற்போம். எங்களூர் வேளாண்மை சிறந்து பெருகி வேளாண் பெருமக்களின் குடும்பங்களில் மகிழ்ச்சி குதூகலித்து எமக்கான உணவுத் தேவையை நாமே பூர்த்தி செய்யும் நாளை நோக்கி அடியெடுத்து வைப்போம். இனியொரு பசுமைப் புரட்சிக்கு நிறையவே வேலை யிருக்கின்றது.

இம்முறை நெற்செய்கை களைகட்டியிருக்கின்றது. மழைவீழ்ச்சி பரவலாகி நெல் வளர்வதற்கு ஏதுவாக வயல்களில் நீர்தேங்கி நிறைவான வேளாண்மையாக அனைத்துப் பிரதேசங்களிலும் காணமுடிகின்றது. இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவடைந்து நிற்கின்றது என்னும் மகிழ்ச்சியான செய்தியை இதில் ஆவணப்படுத்தும் அதேவேளையில் நெற்செய்கையில் களைகளின் ஆதிக்கமும் ஆங்காங்கே தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றது. பன்றிநெல் இதனுடன் புது வகையான நெல்லையொத்த பஸ்பாலம் (Paspalam sp) எனும் களையும் பரந்தன் பகுதிகளில் அவதானிக்க முடிகின்றது. இதில் ஆய்வை முன்னிறுத்தி கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

போர் மேகமெல்லாம் கலைத்து இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு மீண்டு இழந்த தை சோகத்தை மறந்து புதுவாழ்வினுள் புத்துயிர் பெற நாமனைவரும் உதவிசெய்தல் வேண்டும்.

நொந்து போயிருக்கும் உறவுகளுக்கு தெம்பு கொடுத்து அவரவர் வாழ்க்கையின் அர்த்தம்புரிய வழிசெய்தல் வேண்டும்.

இத்திருநாள் ஒற்றுமையின் செய்தியை ஓங்கி யொலிக்கும் தைத்திருநாள்.

தைமகளி-ன் வருகையை நாம் அனைவரும் எமக்குரிய கலை, பண்பாட்டு விழுமியங்களினூடாக உணர்ந்து நல்வாழ்வு வாழ முயலவேண்டும்.

வடக்கில் வீசும் காற்று வசந்தமாகி வீச ஆரம்பித்த நாளிலிருந்து பல அபிவிருத்திப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம். பாதைகளும் நெடுஞ்சாலைகளும் அகன்று போக்குவரத்திற்கு உதவுவனவாக மாறும் இவ்வேளையினை நினைந்து கொள்ளுதல் சிறப்பு.

வெளிநாட்டில் வதியும் எம் உறவுகள் ஈட்டிய செல்வத்தை எங்களூரில் முதலீடு செய்ய விரும்பும் இவ்வேளையில் நாமும் அவர்களுக்கு உதவுதல்மூலம் புதிய வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்களும் தொழில்வாய்ப்பும் அதிகரிக்க வழி பிறந்திருக்கின்றது. வேளாண் வர்த்தகத்தில் முதலீடு செய்வதற்காக முன் வந்திருக்கும் எம் உறவுகளின் ஈடுபாட்டை பூர்த்தி செய்வதற்கான வழிகளையும் வாய்ப்புக்களையும் விரைந்து பெருக்கவேண்டும். இந்நிறுவனங்கள் வெறுமனே ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டனவாக இல்லாது இன்னலுக்குள்ளான மக்களுடைய வாழ்வை மேம்படுத்தும் வகையில் வேலைவாய்ப்புக்கள், சுய வேலைவாய்ப்புக்கள் இன்னும் எங்களூர் மூலப் பொருட்களை உள்வாங்கும் தொழில் நுட்பங்கள் என்பனவற்றை விருத்தி செய்வனவாக அமையவேண் டும்.

பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான அடித்தளம் பலமாக இடப்படல்வேண்டும். இதற்கென சந்தைவாய்ப்பு அதிகமாகவுள்ள மதிப்பேற்றஞ்செய்த பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பினை ஊக்குவிக்க வழிசெய்தல் காலத்தின் தேவையாகும். சிறுவர்கள் வேலையாட்களாக திசை திருப்பப்படாது அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்து எங்கள் இளையோருக்கு தேவையான கல்வியைக் கொடுத்து அவர்களை இத்திருநாட்டின் வளமான சந்ததியாக நாட்டினது வளர்ச்சிக்கான தூண்களாக மாற்றிடவேண்டும்.

நல்ல உணவு, அதுவும் சத்தான நஞ்சற்ற உணவு, நல்லநீர், சுகந்தமான சுத்தமான காற்று, பசுமையான சுற்றுச்சூழல் என அனைத்தும் அனைவருக்கும் கிடைக்க நாமனைவரும் ஒன்றிணைவோம்.

எமது சொந்தக்குறுகிய விருப்பபாடுகளுக்கப்பால் விவசாயபீடத்தின் கிளிநொச்சிக்கான நகர்வும் அத னது சமூக மேம்பாட்டிற்கான பங்களிப்பும் உறுதி செய்யப்படல் வேண்டும். இதன்மூலம் முழு உலகிற்கும் நல்ல செய்தியை இங்கிருந்து நாம் கொடுக்க இன்னும் முன்னின்று உழைத்தல்வேண்டும்.

விவசாயத்தை விவசா யியுடன் சேர்ந்து விளை நிலத்தில் முழுமையாக க்றகும்காலம் கனிந்து வருகிறது. வாருங்கள் எம்மால் முடியாதது எதுவுமே இல்லை.

(தொடரும்)

# கொழும்பு கம்பன் கழகத்தின் பேச்சு,கவிதை போட்டிகள்

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகத்தினால் 2012 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழா எதிர்வரும் பெப்ரவரிமாதம் நடைபெறவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டுக் கழகம் அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சு மற்றும் அமரர் பொன் பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதை போட்டிகள் என்பன பற்றி அறிவித்துள்ளது.

மேற்படி போட்டிகள் இருபிரிவுகளாக இடம் பெறவுள்ளது. இதில் கீழ்ப்பிரிவு போட்டிகளில் 19 வயதிற்குட்பட்டோரும், மேற்பிரிவு போட்டிகளில் 20 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ளலாம்.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேச்சும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் இப் போட்டியில் பங்குபற்றமுடியும்.

இப்போட்டிகளுக்கான தலைப்புக்கள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பானதாக அமைந்திருக்கும்

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தில் முழுப்பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், ஆகியவை குறிப்பிடவேண்டும். மாணவர்களா யின் பாடசாலை பெயர், இல்லமுகவரி கலந்து கொள்ளும் போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, பூர்த்திசெய்து கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராமசேவகரிடம் உறுதிப்படுத்தி செயலாளர், இல.12,கொழும்பு கம்பன் கழகம், இராம கிருஷ்ணகார்டன், கொழும்பு-06 என்னும் முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் என கழகம் அறிவித்துள்ளது.

நடுவர்கள் குழுவினால் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (2-7)

# லசந்த படுகொலை குறித்து விசாரணை நடத்த முடியாவிட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பு

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்த முடியாவிட்டால் அதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் குற்றவாளிகளை கைது செய்யக்கூடிய ஆற்றல் இலங்கையின் பொலிஸாருக்கு காணப்படுகின்றது. இந்த நிலையில் லசந்த படுகொலையாளிகளை கைது செய்வதற்கு ஏன் முடியவில்லை.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே காலத்தை கடத்தாமல் உடனடியாக இந்த பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவரின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த ஜேசுதாசன் என்பவரின் மரணம் பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

லசந்த படுகொலை சம்பவம் தொடர்பில் தேவைக்கு அதிகளவான சாட்சியங்கள் காணப்படுகின்றன.

வெளிநாட்டில் வசித்து வந்த குமரன் பத்மநாதனை பொலிஸார் கைது செய்திருந்தனர். எனவே லசந்த படுகொலையாளிகளை கைது செய்வது சிரமமாக அமையாது.

விசாரணை நடத்தி நியாயம் வழங்க அரசாங்கத்திற்கு உண்மையிலேயே விருப்பம் இருந்தால் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவது கடினமானதல்ல என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.(அ-2)

# வவு.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்கள் அனுமதி 18 ஆம் திகதி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 2012/2014 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்கள் அனுமதி எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

புதிய அனுமதிக்கான பதிவு செய்து கொண்டவர்கள் மேற்படி திகதியில் காலை 9.30 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பெற்றோருடன் சமுகமளிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ஆர்.பேனாட் அறிவித்துள்ளார்.

இம் மாணவர் ஆசிரியர்களுக்கான கடிதங்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் ஆசிரியர் விடுதியில் தங்கி பயிற்சியினை தொடர்வதற்கான ஆயத்தங்களுடன் வருமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 09



ஹிட்லர்

மஞ்சூரியில் முழு அதிகாரம் செலுத்தும் எஜமானனாக விளங்கிய குவாண்டுங் இராணுவத்தின் படைத்தலைமை, ஜப்பானிய அதிகாரத்துக்கு கீழ்ப்படிதல், கம்யூனிச எதிர்ப்பு ஆகியவற்றை ஆக்கிரமிப்புப் பிரதேச மக்களின்மீது புகுத்துவதில் பெரும் கவனம் செலுத்தியது. “மாபெரும் ஜப்பானைப்” பயிலுவது பள்ளிப் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டது. இந்த மாபெரும் ஜப்பானுடன் உரால் வரையிலிருந்த தொலைகிழக்கு, சைபீரியப் பிரதேசங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. பல இடங்களில் குறிப்பாக சோவியத் எல்லைக்கு மிக அருகேயுள்ள இடங்களில் ஏராளமான ஜப்பானிய குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன. சோவியத் யூனியன், மங்கோலிய மக்கள் குடியரசிற்கு எதிரான யுத்தத்தில் இவர்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த இடங்களின் மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

## யுத்தத்தின் முன்னணைப் பொழுதில்


தனது ஆக்கிரமிப்பு இலட்சியங்களை அடைவதற்கான பெரும் சுதந்திரத்தை அண்டயும் பொருட்டு ஜப்பான் 1933 ஆம் ஆண்டு மார்ச் 27 -இல் சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேறியது. 1934 ஆம் ஆண்டு கடற்படை ஆயுதம் தரித்தலைப் பற்றிய வாஷிங்டன் மகாநாட்டு (1921-1922) உடன்படிக்கைகளை நிராகரித்தது. அதேபொழுது ஜப்பான் பாசிச ஜேர்மனியை நெருங்கி வந்தது. 1936ஆம் ஆண்டு நவம்பர் 25 இல் இதனுடன் “கம்யூனிச அகில எதிர்ப்பு உடன்படிக்கையை” செய்து கொண்டது. 1940 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம்திகதிஜேர்மனி இத்தாலியுடன் “முத்தரப்பு உடன்படிக்கையை” செய்துகொண்டது.

ஆக்கிரமிப்பு நோக்குடைய வெளிநாட்டு அரசியற் கொள்கையோடு கூட ஜப்பானின் ஆளும் வட்டாரங்கள் நாட்டில் வாழ்க்கையை பாசிசமயமாக்கி இராணுவத்தைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்கு உள்நாட்டுக் கொள்கையையும் பின்பற்றின. **1937ஆம் ஆண்டு ஜப்பான் சீனாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் இறங்கியது.** சீனாவிற்கு எதிராக ஜப்பானிய இராணுவ வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தம் இவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இழுபறித் தன்மையைப் பெற்றது.

குவாண்டுங் இராணுவத்தின் படைத் தலைமை, சோவியத் யூனியனுக்கு சொந்தமான சீன கிழக்கு இருப்புப் பாதையிலும் சோவியத் யூனியன் மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின் எல்லைப் பகுதிகளிலும் இடையறாது இராணுவச் சச்சரவுகளை ஏற்படுத்தும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இப்பாதையை 140 மில்லியன் ஜென்களுக்கு விற்கும் யோசனையை 1933 ஆம் ஆண்டிலேயே சோவியத் அரசாங்கம் மஞ்ஜோவு-கோ (உண்மையில் ஜப்பான்) அரசாங்கத்திடம் தெரிவித்தது. தொலை கிழக்கில் பூசல்கள் மற்றும் சச்சரவுகளின் மூல ஊற்றுகளை அகற்றுவதில் சோவியத் யூனியனுக்கு உள்ள உண்மையான விருப்பத்தை இந்த நடவடிக்கை தெளிவுபடுத்தியது. ஆனால், இராணுவ வெறிகொண்ட ஜப்பானோ சோவியத் எல்லையில் தொடர்ந்து புதிய ஆத்திர மூட்டம் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. மொத்தமாக 1935 ஆம் ஆண்டில் ஜப்பானியர்களும் அவர்களது ஏஜெண்டுகளும் சோவியத் எல்லைகளில் கிட்டத்தட்ட 80 ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஜப்பானிய சுன்காரிய கடற்படையின் ஆத்திரமுடுட்டும் செயல்கள் அதிகமாயின. 1936 ஆம் ஆண்டு சோவியத் எல்லைக் காவற்படை 137ஜப்பான் ஏஜெண்டுகளைக் கைப்பற்றியது.

1938 ஆம் ஆண்டு குவாண்டுங் இராணுவம் ஹசன் ஏரிப் பிரதேசத்தில் சோவியத் யூனியன் மீதும் 1939 ஆம் ஆண்டு ஹால்ஹின் கோல் ஆற்றின் அருகே மங்கோலிய மக்கள் குடியரசின்மீதும் அயுதத் தாக்குதலைத் தொடுத்தது. சோவியத் இராணுவம் தந்த பதிலடியானது, போர்த்தந்திர மூலப் பொருட்கள் அதிகமிருக்கும் தென் கிழக்காசிய நாடுகளையும், தென் கடலோர நாடுகளையும் வெல்வதற்கு முதல் முக்கியத்துவம் தர வேண்டும் என்று ஜப்பானிய அரசாங்கம் முடிவு செய்ததன் மீது குறிப்பிட்ட தாக்கம் செலுத்தியது.

ஆகஸ்ட் 13, 1937-ஜப்பானியப் படை சீனாவின் பீஜிங்கிலிருந்து சென்-மென் பிரதான வாயிலூடாக டர்பர் அரண்மனை நோக்கி நகர்கிறது.



இவ்வாறாக அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு ஏகாதிபத்தியவாதிகளால் ஊக்குவிக்கப்பட்ட இராணுவ ஜப்பான், சீனாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பில் இறங்கி மஞ்சூரியாவைக் கைப்பற்றி சோவியத் எல்லையருகே வந்தது. அதே நேரத்தில் இது பசுபிக் சமுத்திரப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து வசமிருந்த பிரதேசங்களின் மீது தாக்குதல் தொடுக்க இரகசியமாய் தயாராகி வந்தது. தொலை கிழக்கில் உலக யுத்தத்தின் ஆபத்தான தோற்றுவாய் முளைத்தது.

### கூட்டுப்பாதுகாப்பு முறையைத் தோற்றுவிக்க சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள்

சமாதானக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்த சோவியத் யூனியன் யுத்தத்தைத் தவிர்க்கவும் கூட்டுப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தவும் ஏகாதிபத்திய அரசுகளின் சோவியத் எதிர்ப்பு சதியை தீவிரமாக எதிர்த்து நிற்கவும் இயன்ற அனைத்தையும் செய்தது. சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை எல்லா நாடுகளுடனும் காரிய ரீதியான தொடர்புகளை பலப்படுத்துவதையும், அண்டை அரசுகளுடன் சமாதான, நல்லண்டை உறவுகளை வளர்ப்பதையும் ஆக்கிரமிப்பிற்குப் பலியான, தமது சுதந்திரத்திற்காக போராடும் மக்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

உலக நாடுகளிலேயே சோவியத் யூனியன் மட்டுமே பாசிச ஜேர்மனி மற்றும் இத்தாலியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்தது. கூட்டுப் பாதுகாப்பை ஏற்பாடு செய்வது சம்பந்தமான திட்டவட்டமான நடவடிக்கைகளை முன்மொழிந்தது. இத்தாலிய ஆக்கிரமிப்பிலிருந்த எத்தியோப்பிய மற்றும் அல்போனிய மக்களின் பாதுகாப்பிற்கு ஆதரவாயும் ஹிட்லரின் ஆக்கிரமிப்பிலிருந்த செக்கோஸ்லோவாக்கிய மக்களுக்கு ஆதரவாயும் சோவியத்யூனியன் உறுதியோடு நின்றது.

மூனிக் சதி நடக்கவிருந்த தருணத்தில் சோவியத்யூனியன், பரஸ்பர உதவி பற்றிய ஒப்பந்தத்திற்கேற்ப பாசிச ஜேர்மனியின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கணிசமான அளவு உண்மையான இராணுவ உதவியை செக்கோஸ்லோவாக்கியாவிற்கு முன்மொழிந்தது. இந்நோக்கத்தோடு 76 துப்பாக்கிப் படை மற்றும் குதிரைப் படை டிவிஷன்களும் 3 டாங்கி கோர்பஸ்களும் 22 தனி டாங்கி பிரிகேட்டுக்களும் 12 விமான பிரிகேட்டுக்களும் செஞ்சேனையின் மற்ற பிரிவுகளும் இராணுவத் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

ஜேர்மனால் தாக்கி அழிக்கப்பட்ட போலந்துப் போர் விமானம்



**வி.அ.மத்சுலேன்கோ**

(தொடரும்)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு ஆராயவில்லை

## பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடத்தக்க பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. இவை நல்லிணக்க மற்றும் இனப்பிரச்சினை என்ற விடயங்களில் அமைந்துள்ளனவேயன்றி இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து உரிய பரிந்துரைகள் இடம்பெறவில்லை என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலிஸ்ரெலியா பேர்ட் இது தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கருத்துரைத்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதே இலங்கைக்கு பரீட்சைக்களமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழுவின் சில பரிந்துரைகள் சில மாதங்களில் நடைமுறைப்படுத்தக்கூடியவை. ஏனைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த காலம் செல்லும்.

இந்த நிலையில் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலேயே இறுதியாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் போர்க்குற்றம் தொடர்பில் நல்லிணக்க அறிக்கையில் உரிய பரிந்துரைகள் இடம் பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

போர்க்குற்றம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள், சனல் 4 காணொளி, ஐக்கிய நாடுகள் நிபுணர்களின் போர்க்குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இந்த அறிக்கையில் பதில்கள் வழங்கப்படாமை திருப்தியளிக்கவில்லை.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் இருந்து படைகளை குறைத்து பொதுமக்களின் நிர்வாகத்துக்கு இடம் தரப்பட வேண்டும் என்ற விடயத்தில் அரசாங்கம் உடனடியாக நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

(அ-2)

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் கொழும்பில் மேம்பாதைகள்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு பெரும்பாகப் பகுதியில் கொங்கிறீட் தூண்களின் மீதான மூன்று மேம்பாதைகளை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிரதான நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில் கடவத்தை-கிருளப்பனை, கொழும்பு கோட்டை- கொட்டாவ மற்றும் கொழும்பு கோட்டை- பேலியகொடைக்குமிடையில் இந்த மூன்று மேம்பாதைகளும் நிர்மாணிக்கப்படும்.

இதற்கான சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குகிறது. மூன்று மேம்பாதைகளும் கொழும்பு வெளிவாரி சுற்றுவட்டப் பாதையுடன் இணைக்கப்படும். இந்த 3 பாதைகளும் சுமார் 45 கிலோ மீற்றர் தூரம் கொண்டவையாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# நல்லிணக்க செயற்பாடுகள் மூலம் இணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள்

## அமைச்சர் டீயூ அழைப்பு

கடந்த காலங்களில் நடந்த தவறுகள் தொடர்பில் சுய விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு நல்லிணக்க செயற்பாடுகள் மூலம் இணக்கத்தை ஏற்படுத்தி கொள்ள முன்வருமாறு சகல அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுப்பதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான டீயூ.குணசேகர விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை ஒன்று இலங்கையில் இல்லைஎனகூறுபவர்கள்நல்லிணக்கஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிப்பது குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை பொறுத்தவரையில் ஆணைக்குழுவின் அறிக்கையானது பரிபூரணமான, தர்க்கரீதியான, யதார்த்தமான, சாதகமான பரிந்துரைகளை கொண்ட குறுகிய மற்றும் நீண்டகால நலன்களை அடிப்படையாக கொண்டது என கருதுகிறது.

வரலாற்றில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட தீர்வுகள் ஏதோ ஒரு காரணத்தினால் இல்லாமல் செய்யப்பட்டன. இதன் பிரதிபலனாக மக்கள் தொடர்ந்தும் துன்ப, துயரங்களுக்குள் தள்ளப்பட்டனர். இதனால் எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் தற்போது கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை அரசியல் கட்சிகள் தவறவிடக்கூடாது எனவும் இதனடிப்படையில் தமது கட்சி விடுத்துள்ள இந்த அழைப்பை அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குணசேகர மேலும் கூறியுள்ளார்.

(அ-2)

# தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி நாகப்பட்டினத்தில் உண்ணாவிரதம்

## முதல்வரை சந்திக்கவும் முடிபு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழகக் கடற்றொழிலாளர்களை விடுவிக்கக் கோரி தமிழகம் நாகப்பட்டினத்தில் கடற்றொழிலாளர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 13 கடற்றொழிலாளர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய படகுகளை கைப்பற்றி பொருட்களையும் கடற்படையினர் சேதப்படுத்தியுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பொங்கல் பண்டிகைக்குள் கடற்றொழிலாளர்களை விடுவிக்கக்கோரியும் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமிழக முதல்வர் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் முதல்வரை நேரில் சந்திக்கும் பொருட்டு சென்னைக்கு செல்லவுள்ளனர். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் காரணமாக 400 விசைப்படகுகள் மற்றும் 500 பைபர் படகுகள் கடலுக்குச் செல்லாமல் நாகபட்டினம் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இலங்கை ஜனாதிபதியின் மைத்துனர் திருக்குமரன் நடேசன் தாக்கப்பட்டதன் எதிரொலியாகவே இந்தியக் கடற்றொழிலாளர்களை இலங்கைக் கடற்படை சிறைபிடித்துள்ளதாக அங்கு தகவல் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# முதல்முறையாக முல்லைத்தீவில் சமுர்த்தி திட்டம் நடைமுறைக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன் முறையாக சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதால் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள 14 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யும் பணி தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமலிருந்தது. தற்பொழுது யுத்தம் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து சமுர்த்தித்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வந்துள்ளது.

இம் மாவட்டத்தில் 5 உதவி அரசாங்க பிரிவுகளிலும் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள 14 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் 30 வீதமான பயனாளிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்களும் கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களும் முன்னுரிமை அடிப்படையில் இத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். (அ-2)

# தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும் நிகழ்வு 16 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 1 வகுப்பிற்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் நிகழ்வுகளில் அரசியல் பிரமுகர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கல்வியமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் என்பனவற்றின் ஆலோசனைக்கமைவாக பாடசாலைகள் விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தரம் 1 வகுப்பு மாணவர்களின் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாக வரலாற்று நிகழ்வாக விழாவினை சிறப்பிப்பதற்கான ஏற்பாடுகளில் அதிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

புதிய தரம் 1 மாணவர்களை தரம் 2 மாணவர்கள் இனிப்பு வழங்கி மலர் தூவி வரவேற்பதற்கான விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கல்வி குறித்த சிந்தனையை வலியுறுத்தும் வகையிலான விசேட சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, தரம் 1 மாணவர் அனுமதியின்போது சில பாடசாலைகள், அதிகளவு பணம் கறக்கும் இரகசிய பணியில் ஈடுபடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சட்டவிரோத மரக்குற்றி வியாபாரம்; விசேட பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தம்போவ வனப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றி வியாபாரத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

புத்தளம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் வனப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து இந்த வியாபாரம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது 12 விதமான மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் சாலியவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(அ-2)

# உலக ஹிந்தி தினவிழா கண்டியில் நடைபெறும்

உலக ஹிந்தி தின விழாவை முன்னிட்டு கண்டி உதவி இந்தியத் தூதரகம் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்திய மொழியிலான கட்டுரை, பேச்சு போன்ற போட்டி நிகழ்ச்சிகளை நடத்துவற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கண்டி உதவி இந்திய தூதரக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள உலக ஹிந்தி தினவிழாவில் நடைபெறவுள்ள போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் கற்கை நிலையங்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 081 2222652, 081 2223786 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# மேர்வின் சில்வா பங்கேற்கவில்லை!

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா பங்கேற்க வில்லை.

களனி பிரதேச சபை உறுப்பினர்கள் அமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக் களை சுமத்தியதன் பின்னர் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக்கூட்டம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் மேர்வின் சில்வா அநேகமாக அமைச்சரவைக்கூட்டங்களில் பங்கேற்பதனை வழமையாகக் கொண்டவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை களனி பிரதேசசபை உறுப்பினர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் நோக்கில் மேர்வின் சில்வா ஜனாதிபதியை சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததாக சிங்கள பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ஹெய்டியில் சிறுமிகள் துஷ்பிரயோகம்; இல.இராணுவத்தினரை தண்டிக்க வேண்டும்

## ஐ.நா. செயலாளரின் பேச்சாளர் தெரிவிப்பு

**தென் அமெரிக்காவின் ஹெய்டி நாட்டில் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய இலங்கை இராணுவத்தினர் மீது இலங்கை அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பரில் ஹெய்டியில் அமைதிகாப்புப் பணியில் ஈடு பட்டிருந்த 950 இலங்கை இராணுவத்தி னரில் 111 படையினரும் 3 அதிகாரிகளும் அந்த நாட்டு சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியது மற்றும் சுரண்டலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

இலங்கை அரசாங்கம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த விவகாரம் அண்மையில்தான் வெளிச்சத்துக்கு வந்திருந்தது.

இது தொடர்பாக நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் மார்டின் நெஸர்க்கி கருத்து தெரிவிக்கையில்,

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஹெய்டியில் அமைதிகாப்புப் படையில் பணியாற்றி இலங்கை இராணுவத்தினர் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இலங்கை அரசாங்கத்திற்கே உண்டு.

இது அமைதிகாப்புப் படைக்கு படையினரை அனுப்பும் நாடுகளை சார்ந்த விவகாரம். அந்நாடுகளின் இறையாண்மைக்கு உட்பட்டதும் அவர்களின் தேசிய சட்டங்களுக்குட்பட்ட விடயமாகும்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கவில்லை என்றோ அல்லது விசாரணை நடத்த வில்லை என்றோ எண்ணுவது முறையல்ல. ஆனால் இது அந்த நாட்டின் தேசிய அதிகாரங்களின் நீதிமுறைக்குட்பட்டது.

இக்குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்ட இலங்கை இராணுவத்தினர் கட்டாயம் அதற்காக தண்டிக்கப்பட வேண்டும். இதனை இலங்கை அரசாங்கமே செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை கடற்படையின் குழுவொன்று ஐ.நா. அமைதிகாக்கும் படைக்காக கடந்த 7 ஆம் திகதி ஹெய்டி சென்றது. 44 பேர்களை உள்ளடக்கிய இக்குழுவில் 2 கடற்படை அதிகாரிகள், 10 சிரேஷ்ட படை வீரர்கள் மற்றும் 32 கனிஷ்டபடை வீரர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ்.உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் அடுத்த பயிற்சி திருகோணமலை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் என இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய மக்கள் பிரதிநிதிகளுக்கு இருநாட்கள் பயிற்சி வழங்கும் வேலைத்திட்டமொன்றினை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தினை இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் அமுல்படுத்தி வருகின்றது.

நிறுவகம் மாவட்ட ரீதியாக தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 500 மக்கள் பிரதிநிதிகள் நன்மையடையவுள்ளனர். முதலாவது சிங்கள மொழி பயிற்சி கம்பஹா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு பயிற்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

தமிழ்மொழி மூல மக்கள் பிரதிநிதிகளுக்கான முதலாவது பயிற்சி அம்பாறை மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டப் பயிற்சியைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் அதனைத்தொடர்ந்து யாழ். மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பணிப்பாளர் ஹமட் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வறுமைக்கோட்டில் வாழும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வாருங்கள்

## துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் அழைப்பு

(கிளிநொச்சி)

வன்னியில் இருக்கின்ற மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் துன்பநிலைமையில் காணப்படுகின்றனர்.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த நிலையிலும் தமது பிள்ளைகளுக்கான கல்வியை வழங்குவதில் ஆர்வமான இருக்கின்றார்கள். இத்தகைய வறிய நிலையில் உள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டியது சமகாலதேவைப்பாடாகவுள்ளது என துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்ற சிவத்தமிழ்செல்வி அறக்கொடை வழங்கும் நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையுடைய வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் 100 பேருக்கு வழங்கப்பட்ட சிவத்தமிழ் செல்வி நிதித்தொகையை பெற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்வேறு துன்பங்களின் பின்பும் வன்னிப் பிரதேசத்து மக்களால் வெளியே எடுத்து வரப்பட்ட சொத்தாக கல்வி விளங்குகின்றது.

பல்வேறு இழப்புக்களை சந்தித்த போதிலும் எஞ்சியுள்ளது கல்வி மட்டுமே.

எங்களுடைய குழந்தைகள் இப்பொழுது எதை இழந்தாவது கல்வியை பெற வேண்டும் என்ற மிகப் பெரிய ஆதங்கத்தில் உள்ளனர். பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அவர்கள் கல்வி வளம்பெற நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

இதனூடாகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மீது கொண்ட கனவும் நிறைவாக்கப்படும். எமது வலயத்தை பொறுத்த வரை ஆசி ரிய ஆளணிவளத்தை வெளியில் இருந்து பெறவேண்டியநிலை தற்போது காணப்படுகின்றது.

இதை மாற்றி அப்பிரதேசங்களில் இருந்தே ஆசிரிய ஆளணியினரை உருவாக்க கல்வி வளர்ச்சியில்கவனம் செலுத்த வேண்டும். கல்வியில் புலமையான சமூகமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றார். (அ-2)

# ஒழுக்காற்று விசாரணை நடந்தாலும் கட்சியை விட்டு விலகமாட்டேன்

## தயாசிறி எம்.பி. விடாப்பிடி



(கொழும்பு)

கட்சிக்குள் எந்த வகையான தடைகள் எனக்கு வந்தாலும் எத்தனை ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தினாலும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒருபோதும் விலகிச் செல்லமாட்டேன். கட்சிக்குள்ளேயே இருந்து கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதே எப்போதும் எனது நோக்கமாக இருக்கும் என்று கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எனக்கு எதிராக எத்தனை ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நான் கட்சியை விட்டு ஒது போதும் விலகிச்செல்ல மாட்டேன்.

சவால்களை எதிர்கொண்டுகட்சிக்குள் இருந்தவாறே அதனை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்ல அர்ப்பணிப்புடன் உழைப்பேன்.

என்னைப் பொறுத்தவரையில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பது புது விடயமல்ல. கட்சியின் முன்னாள் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே ஒழுக்காற்று விடயங்கள் என்பன புதிதாக எனக்கு மட்டும் மேற்கொள்ளப்பட வில்லை என்பது கூறப்பட வேண்டும்.

நான் எப்போதும் மக்களுடன் அரசியல் செய்பவன். மக்களின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவன். எனவே எனக்கு எதிரான தடைகள் குறித்து நான் தளர்ந்து விடமாட்டேன். எப்போதும் மக்களுடன் இணைந்து நான் எனது அரசியல் பயணத்தை தொடருவேன்.

ஒழுக்காற்று நடவடிக்கைகளை எனக்கு எதிராக மேற்கொண்டு சவால் விடுகின்றனர் என்பதற்காக நான் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள மாட்டேன் என்றார். (அ-2)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைதானார்

பாதுக்க மீகொட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 800 பைக்கற்றுக்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

17 கிராம், 740 மில்லிகிராம் நிறையுடைய போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த போதைப்பொருள் தொகை முச்சக்கர வண்டியொன்றின் மூலம் கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் மீகொட நெடுஹேண பகுதிக்கு அருகில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பயன்படுத்தி வந்த சந்தேகநபர்கள் சிலரால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# தூணாக நின்ற தமிழன்

# துரும்பானது ஏன்?



பழ.நெடுமாறன்

உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு, உச்சநீதிமன்றம் தலையிட்டு நடுவர் மன்றத்தை அமைக்கும்படி மத்திய அரசுக்கு ஆணை பிறப்பித்தது. நடுவர் மன்றம் இடைக் காலத் தீர்ப்பு ஒன்றை வழங்கி ஆண்டு தோறும் 205 டி.எம்.சி நீரைத் தமிழகத்துக்கு அளிக்க வேண்டும் என ஆணையும் பிறப்பித்தது. நடுவர் மன்றத்தின் ஆணையை ஏற்பதற்கு கர்நாடகம் மறுத்து விட்டது.

இடையில் நடுவர் மன்றத்தைச் செயற்படாமல் முடக்குவதற்கும் கர்நாடகம் சதி செய்தது. கர்நாடகத்தைச் சேர்ந்த தேவகௌடா மத்தியில், பிரதமர் பொறுப்பை ஏற்றபிறகு ஏற்கனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது, நடுவர்மன்றத் தலைவர் மீது வழக்குத் தொடர்ந்த காரணத்தால் நடுவர் மன்றத் தலைவர் பதவி விலக நேர்ந்தது.

இதற்குக் காரணமான தேவகௌடாவை பிரதமராக்கியதில் தி.மு.க.வுக்குப் பெரும் பங்குண்டு. நடுவர் மன்றத்துக்கு மீண்டும் புதிய தலைவரை நியமிப்பதற்கு காலம் கடத்தப்பட்டது. இறுதியாக ஒருவர் நியமிக்கப்பட்டு நடுவர்மன்றம் ஒரு இறுதித் தீர்ப்பை வழங்கிற்று. ஆனால், இடைக்காலத் தீர்ப்புக்கு ஏற்பட்ட கதியே இறுதித் தீர்ப்புக்கும் ஏற்பட்டது. இரண்டு தீர்ப்புகளையும் கர்நாடகம் மதிக்க மறுத்தது. அதன்மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு இன்றுவரை முன்வரவில்லை. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட அதற்காகக் கவலைப் படவில்லை.

ஈழத்தமிழ் பிரச்சினையிலும் இதே போக்குத் தொடர்ந்தது. 2009 ஆம் ஆண்டில் விமானக்குண்டு வீச்சுக்கும் பீரங்கித் தாக்குதலுக்கும் சிங்கள இராணுவ வெறியாட்டத்திற்கும் ஆளாகி மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தவித்தபோது அவர்களைக் காப்

**பழ.நெடுமாறன்**

பாற்றத் தமிழகம் எவ்வளவோ போராடியும்கூட மத்திய அரசு அலட்சியம் செய்தது. எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றியது போல, சிங்கள இனவெறி அரசின் கொலைவெறி இராணுவத்துக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து இந்திய அரசு துணைநின்றது.

இதன் விளைவாக, ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் பதைக்கப்பதைக்க படுகொலை செய்யப்பட்டார்கள். மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் முள்வேலி முகாமுக்குள்ளே அடைபட்டு, போதுமான உணவு, தண்ணீர், மருந்து இல்லாமல் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள். இந்திய அரசைத் தடுக்க வேண்டிய தமிழக தி.மு.க. அரசு இரட்டைவேடம் பூண்டது. அப்போது மன்மோகன் சிங்கின் அரசு தி.மு.க. வின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவில்தான் பதவியில் இருந்தது என்பதுதான் அதைவிடக் கொடுமை.

இலங்கையில் உடனடியாக போர்நிறுத்தம் செய்யப்படாவிடில் எங்கள் ஆதரவை திரும்பப் பெற்றுக் கொள்வோம் என்று சொல்கிற துணிவு தி.மு.க.வுக்கு வரவில்லை, போகட்டும். குறைந்த பட்சம் இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய தி.மு.க. அமைச்சர்கள் பதவி விலகி இருக்க வேண்டும். அவ்வாறு செய்யக்கூட அவர்கள் துணியவில்லை. செய்ய வேண்டியதைச் செய்யாமல் சென்னைக் கடற்கரையில் சாகும்வரை உண்ணாவிரதம் என மூன்று மணி நேர நாடகம் ஒன்றை கருணாநிதி



அரங்கேற்றினார்.

**மன்னிக்க முடியாத வரலாற்றுப் பெரும் தவறை ஈழப்பிரச்சினையில் தி.மு.க செய்தது** என்று சரித்திரம் அந்தக் கட்சியின் துரோகத்தைப் பதிவு செய்யும்.

ஈழத்தமிழர்களை மட்டுமா தமிழக மீனவர்களை ஒரேயடியாக கைகழுவி விட்டது மத்திய அரசு. 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக மீனவர்களைச் சிங்கள கடற்படை வேட்டை ஆடுகிறது. விரட்டி விரட்டிச் சுடுகிறது. இந்தியக் கடற்படையோ வேடிக்கை பார்க்கிறது. இதுவரை 500க்கு மேற்பட்ட மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனமாகி இருக்கிறார்கள் . பல கோடி ரூபாய் பெறுமான, மீனவர்களின் படகுகள், வலைகள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இத்தனைக்கும் மௌன சாட்சியாக மத்திய அரசு விளங்குகிறது.

உலகில் எந்த நாட்டிலும் கடலில் எல்லை தாண்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுட்டுத்தள்ளுவதில்லை. உலகத்திலேயே அவ்வாறு செய்கிற ஒரேநாடு இலங்கைதான். தன்னுடைய குடிமக்கள் கொல்லப் படுவதை வேடிக்கை பார்க்கும் ஒரேநாடும் இந்தியாதான்.

தமது மீனவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் மத்திய அரசுக்கு உண்டு. தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய குடிமக்களாகவே அரசு கருதவில்லை என்று மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தமிழகத்தின் பல கனவுப்பெருந் திட்டங்கள் நீண்ட காலமாகவே கிடப்பில் கிடக்கின்றன. மேற்கு நதி நீரை கிழக்கே தமிழகத்துக்குத் திருப்புதல், கங்கை-காவிரி இணைப்புத் திட்டம், சேதுக்கால்வாய்த் திட்டம் போன்ற நிறைவேறாத பல திட்டங்கள் உண்டு. ஆனால், முன்னையவை இரண்டும் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் சேதுக் கால்வாய் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு, கோலாகலமான தொடக்க விழா மதுரையில் நடத்தப்பட்டது.

சோனியா காந்தி, மன்மோகன் சிங், கருணாநிதி போன்றவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். வேகமாக வேலைகளும் தொடங்கப்பட்டு 3ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடலில் கொட்டப்பட்டது. ஆனால், இராமர் பாலம் என்ற பிரச்சினையை முன்வைத்து இத்திட்டத்துக்கு சவக்குழி தோண்டப்பட்டது. பல்லாண்டு காலமாக இந்தத்திட்டம் செயலற்றுக்கிடக்கிறது. நூறாண்டு காலத்துக்கு மேலான தமிழர்களின் கனவுத் திட்டமாகும் இது. இத்திட்டத்தின் எதிர்காலம் என்ன என்பது தெரியாமல் தமிழகம் இருளில் வைக்கப் பட்டது. உச்சநீதிமன்றம் விதித்த தண்டனையை விலக்கி இத்திட்டத்தைத் தொடர்வதற்கான நடவடிக்கை எதனையும் மத்திய அரசு மேற்கொள்ளவில்லை. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்களும் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை.

பிற தென்மாநிலங்கள் தங்களுக்குத் தேவையில்லை என்று ஒதுக்கித் தள்ளிய அணுமின் திட்டத்தை தமிழகத்தின் தலையில் கட்டியது மத்திய அரசு. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுக்கத் தமிழகத்துக்குக் கிடைத்தாலும் பரவாயில்லை. ஆனால், பிற தென்மாநிலங்களுக்கும் அதில் பங்களித்துவிட்டு எஞ்சியது தான் தமிழகத்துக்குக் கிடைக்கும். ஆனால் அணு உலை வெடிக்குமானால் அதனால் வரும் அபாயம் முழுக்க முழுக்க தமிழகத்துக்கு மட்டுமே. இதுதான் மத்திய அரசு தமிழனுக்கு வழங்கியிருக்கும் நீதியாகும்.

இந்திய அரசியலில் தமிழகம் பகடைக்காய் ஆக்கப்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் மத்திய அரசில் தமிழகத்துக்கு இருந்த செல்வாக்கின் விளைவாக பெரும் கனரகத் திட்டங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட்டு தமிழகம் தொழில் வளத்தில் இந்தியாவில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. ஆனால், இன்று தமிழகம் ஒவ்வொரு துறையிலும் பின்னோக்கிச் செல்கிறது.

இதுவரை இந்திய வரலாறு கண்டறியாத வகையில் அலைக்கற்றை ஊழல்போன்ற மாபெரும் ஊழலைச் செய்து ஒட்டுமொத்தத்

## தமிழகப் பார்வை

தமிழகத்தைத் தலைகுனிய வைத்து திகார் சிறையாளர்களாக மாறிய சாதனைக்குரியவர்கள் தமிழர்கள் என்ற பெருமை மட்டுமே இப்போது தில்லியில் எஞ்சி நிற்கிறது.

இந்திய அரசியலை ஒருகால கட்டத்தில் தூணாகத்தாங்கி நின்ற தமிழன் இப்போது சிறு துரும்பாக கருதப்பட்டு அலட்சியப் படுத்தப் படுகின்றான். காரணம், தங்களது பதவி சுகத்துக்காக மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட தமிழகத்தின் நலனுக்காக குரலெழுப்பத் தயாராக இல்லை. மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு இருக்கும் வீரம் வேட்டி கட்டிய தமிழக அமைச்சர்களில் ஒருவருக்குக்கூட இல்லாததுதான் என்பதை நாம் சொல்ல வேண்டாம். இந்தியாவே கூறும். தூணாய் நின்ற தமிழன் துரும்பானதன் காரணம் இதுதான் என்று சரித்திரம் இவர்களை இகழும்!

(முற்றும்)

# கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தில்

(கொழும்பு)

பல அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் இடம்பெற்று கொண்டிருக்கும் நிலையில் கொழும்பு,கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை அரசாங்கம் இந்த வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஏ-1 வீதிக்கு சமாந்தரமாக இந்த இரண்டாவது அதிவேக நெடுஞ்சாலை கடுவெல, கம்பஹா, திவுல்பிட்டிய, மீரிகம, ரம்புக்கென மற்றும் கடுகஸ்தோட்டை ஊடாக அமைக்கப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதி நிர்மாணம் தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வு நிறைவடைந்துள்ளதாக அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

இந்த திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கவுள்ள பல நன்கொடையாளர்களுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு பல்கலைக்கழகங்களிலுள்ள பொறியியல் பீடங்களிலிருந்து அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத்திற்கான ஆலோசனைகளை பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## இடைத்தங்கல் பயணிகள், சிறார்களுக்கு விசா கட்டணத்தில் விலக்களிப்பு

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை வரும் இடைத்தங்கல் பிரயாணிகள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விசா கட்டணத்திலிருந்து விலக்களிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் 48 மணித்தியாலங்கள் வரை தங்கியிருக்கும் இடைத்தங்கல் பிரயாணிகளுக்கும் விசா கட்டணம் அறவிடாதிருப்பது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் வெளிநாட்டவர்கள் பிள்ளைகளுடன் இலங்கைக்கு வரும் வாய்ப்பு அதிகரிக்கும் என அமைச்சர் கெஹலிய மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு இணையத்தளத்தின் ஊடாக விசாவை பெறுவதற்கான அனுமதியை ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இணையத்தளங்களின் பதிவு நடவடிக்கை

(கொழும்பு)

ஊடக அமைச்சில் இணையத்தளங்களை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும் 45 இணையத்தளங்கள் பதிவுக்கு உட்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாட்டில் இயங்கும் இணையத்தளங்கள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பதிவு செய்வதற்காக 80 இணையத்தளங்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் இதில் 45 இணையத்தளங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஆதிவாசிகளின் தலைவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பு

(பிபிலை)

பிபிலை ரதுகல ஆதிவாசிகளின் தலைவர் மஹபண்டிலாகெ சுதாவன்னிலாகே எந்தோ குறித்த பிரதேசத்தை சேர்ந்த சிவில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் தகாத முறையில் பேசி ஆதிவாசிகளின் தலைவரை அவமானப்படுத்தியதாகவும் இகினியாகல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து நேற்று குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸரினால் கைது செய்யப்பட்டார். இவர் ரதுகல காட்டு பகுதியில் காணி ஒன்றை அபகரிக்க முற்பட்டதை அடுத்து இந்த தகராறு ஏற்பட்டுள்ளதாக இகினியாகல பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். இகினியாகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




★1539-ஸ்பெயின் கியூபாவை இணைத்துக் கொண்டது.

★1690-கிளாரினெட் இசைக்கருவி ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது.

★1724-ஸ்பெயின் மன்னன் ஐந்தாம் பிலிப் முடிதுறந்தான்.

★1761-இந்தியாவில் பானிப்பட் போரின் மூன்றாம் கட்டம் ஆப்கானியர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.

★1784-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

★1814-நோர்வேயை டென்மார்க் மேற்கு பொமிரானியாவுக்காக சுவீடனுக்கு விட்டுக்கொடுத்தது.

★1858-பிரான்ஸ் மன்னன் மூன்றாம் நெப்போலியன் கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினான்.

★1907-ஜமெய்க்காவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

★1913-கிரேக்கர் துருக்கியரை பிசானி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் வென்றனர்.

★1943-இரண்டாம் உலகப் போர்: பிராங்கிளின் ரூசவெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் கசபிளாங்காவில் சந்தித்து போரின் அடுத்தகட்ட நகர்வுக்கான தீர்மானங்களை எடுத்தனர்.

★1950-சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் பரீட்சார்த்தமாக பறக்கவிடப்பட்டது.

★1969-ஹவாயிற்கு அருகில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 27 பேர் உயிரிழந்தனர்.

★1974-திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பிரித்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

★1994-ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி போரில் யெல்ட்சின் கிரெம்ளினில் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.

★1995-சந்திரிக்கா அரசு- விடுதலைப் புலிகள் 3 ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

★1996-உலகின் முதலாவது 24 மணி முழுநேர தமிழ் வானொலி ஒலிபரப்பு கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்னும் பெயரில் கனடாவின் டொரண்டோ நகரில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

★1998-ஆப்கானிஸ்தானின் சரக்கு விமானம் ஒன்று பாகிஸ்தானில் மலை ஒன்றில் மோதியதில் 50 பேர் உயிரிழந்தனர்.

★2005-சனிக் கோளின் டைட்டான் என்ற நிலாவில் ஐரோப்பாவின் இயூஜென் விண்கலம் இறங்கியது.

### இறப்புக்கள்

★1898-லூயி கரோல், ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர் (பி.1832)

★1901-சார்ள்ஸ் ஹெர்மைட், பிரெஞ்சு கணிதவியலாளர் (பி.1822)


★1957-ஹம்பிறி போகார்ட், அமெரிக்க நடிகர் (பி.1899)

★1978-கியோடல், ஆஸ்திரிய அமெரிக்க, கணித மெய்யியல் அறிஞர் (பி.1906)

★2000-எம்.வி.வெங்கட்ராம், தமிழக எழுத்தாளர் (பி.1920)

### சிறப்பு நாள்

★தமிழ்ப் புத்தாண்டு (2008 ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி 14 அல்லது ஜனவரி 15 இந்து நாட்காட்டியின் படி)



★1977-இந்திய கார்பந்தய போர்மிலா -1 வீரரான கார்த்திகேயனின் பிறந்த தினம்

முல்லைப்பெரியாறு அணை

# நீரிலும் மின்சாரத்திலும் கேரளாவிற்கு பங்குண்டு

(புதுடில்லி)

முல்லைப் பெரியாறு அணை நீர் பங்கீடு குறித்து உச்சநீதிமன்றம் முடிபு எடுக்கலாம் . அணை நீரை பயன்படுத்தி தமிழகம் எடுத்து வரும் நீர் மின்சாரத்தில் கேரளாவுக்கு பங்குண்டு. இது குறித்து உச்சநீதிமன்றம் நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும் என உயர்மட்ட குழுவிடம் கேரளா தாக்குதல்செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு பிரச்சினையை உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ஆனந்த் தலைமையிலான உயர்மட்ட குழுவிசாரித்து வருகிறது. இக்குழுவிடம் கேரள அரசு சார்பில் சட்டத்தரணி ரமேஷ் பாபு நேற்று மனு தாக்கல் செய்தார். அதில் முல்லைப்பெரியாறு அணைக்கட்டு பகுதியில் சுற்றுலா பயணிகளை அனுமதிக்கவும் நதியில் மீன்களை வளர்க்கவும் கேரள அரசுக்கு உரிமை உள்ளது. அணை நீரை பங்கீடு செய்வது குறித்து உச்சநீதிமன்றம் முடிவு எடுக்கலாம். அணை நீரை பயன்படுத்தி தமிழகம் உற்பத்தி செய்து வரும் மின்சாரத்தில் கேரளாவுக்கும் பங்குண்டு. அணை பலமற்றது என்பதற்கான தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆதாரங்கள் இல்லை. என்றாலும் அணையை செயற்படாமல் செய்ய கேரளாவுக்கு அதிகாரமுண்டு. இவ்விடயத்தில் உச்சநீதிமன்றம் நியாயமான முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு கேரள அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.


# நிலநடுக்கம் அறியும் கருவி

(புதுடில்லி)

முல்லைப் பெரியாறு அணையில் நிலநடுக்கத்தை அறியும் கருவியை மத்திய புவியியல் துறை வல்லுநர்கள் பொருத்தியுள்ளனர். முல்லைப்பெரியாறு அணை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட் டுள்ளதாக கேரள அரசு புகார் கூறி வருகிறது. இதற்கு மறுப்பு தெரிவித்தது தமிழக அரசு.

இந்நிலையில் அண்மையில் ஐவர் குழுவின் உறுப்பினர்களான தாத்தே, மேத்தா ஆகியோர் சமீபத்தில் அணையை பார்வையிட்டனர். இவர்களின் ஆலோசனை யின் பேரில் அணையில் நிலநடுக்கத்தை அறிய *சீஸ்மோகிராப்* கருவியை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பேரில் கொல்கத்தாவில் உள்ள மத்திய புவியியல் துறை வல்லுநர்கள் சாம், பர்த்தி ஆகியோர் அணையில் உள்ள ஒயர்லெஸ் அறைக்கு அருகில் சீஸ்மோகிராப் கருவியை பொருத்தினர். இங்கு ஏற்படும் நிலநடுக்கம் குறித்து சட்லைட் மூலமாக கொல்கத்தாவில் அறிய முடியும். (14)



திரிபுரா பல்கலைக்கழகத்தின் 9 ஆவது பட்டமளிப்பு விழாவில் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கபில் சிபல் மற்றும் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி ஆகியோர் கலந்து கொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# திருப்பதி லட்டை கண்காணிக்க நிபுணர்குழு நியமிக்கப்பட்டது

(சென்னை)

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வழங்கப்படும் லட்டு பிரசாதம் உலகப் பிரசித்தி பெற்றது. கடந்த சில மாதங்களாக லட்டின் தரம் குறைந்து விட்டதாக பக்தர்கள் புகார் கூறியுள்ளனர்.

இதையடுத்து திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் லட்டின் தரத்தை உயர்த்த முடிபு செய்துள்ளனர்.

இதன்படி லட்டு தரத்தை உயர்த்தவும் கண்காணிக்கவும் 8 பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படுகிறது. இக்குழுவினர் லட்டு தரத்தை பரிசோதனை செய்த பின்னரே பக்தர்களுக்குவழங்கமுடிபுசெய்யப்பட்டுள்ளது.

லட்டு தரத்தை பரிசோதனை செய்ய ரூபா 50 இலட்சம் செலவில் நவீன கருவிகள் வாங்கவும் திட்டமிட்டுள்ளது.

இது பற்றி தேவஸ்தான அதிகாரி பிரசாத் கூறும் போது திருப்பதி லட்டின் தரம் உயர்த்த பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக தரமான முந்திரி பருப்பு, உலர்ந்த திராட்சை, நெய் போன்ற பொருட்கள் வாங்கப் படும். இதேபோல்அன்னதானத்தின்தரத்தை உயர்த்தவும் முடிபு செய்துள்ளோம் என்றார். (14)

# பாரதத்தின் அவமானம்

(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 42 வீதத்தினர் ஊட்டச் சத்துக் குறைபாடுகளுடன் எடை குறைவாக இருப்பதாகவும் இவர்களின் 59 சதவீதத்தினர் உடல் வளர்ச்சி குன்றியவர்களாக இருப்பதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் புள்ளிவிபரங்களை வெளியிட்ட *பிரதமர் மன்மோகன் சிங்* இதை *தேசிய அவமானம்* என்றே வர்ணித்துள்ளார்.

குழந்தைகளின் சத்துக் குறைபாடுகள் 2004 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பைக் காட்டிலும் தற்போது குறைந்துள்ளது என்று கூறிக்கொள்ள முடியும் என்றாலும் இந்த சமாளிப்புக்கள் எதையும் செய்யாமல் தேசிய அவமானம் என்று வெளிப்படையாகவே ஒப்புக் கெண்டிருப்பதுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் குழந்தைகளுக்குப் போய்ச் சேரும்படியாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் துறை அமைச்சர் கிருஷ்ண தீரத் 1975 இல் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தை (ஐ.சி.டி.எஸ்) திருத்தியமைக்கவும் குறிப்பிட்ட இலக்கை மையப்படுத்தி கவனமாகச் செயற்படவும் இரண்டு இலட்சம் கோடி ரூபாய் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று உடனடியாக கோரிக்கை வைத்திருக்கிறார்.

இந்தியாவில் குழந்தைகள் ஊட்டச்சத்து இல்லாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் வறுமை என்பதைக் காட்டிலும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பலன் கிராமங்கள் வரை சென்று சேரவில்லை என்பதைத்தான் இவை வெளிப்படுத்துகின்றன. (14)

# பாரதச் செய்திகள்

## ஆட்சேபனைக்குரிய தகவல்களை வெளியிட்டால் சமூக வலைத்தளங்களுக்கு தடை விதிக்கப்படும்

### டில்லி உச்ச நீதிமன்றம்

(சென்னை)

ஆட்சேபனைக்குரிய படங்கள் மற்றும் தகவல்கள் இடம்பெறுவதை தடுக்க கூகுள் மற்றும் பேஸ்புக் வலைத்தளம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனில் சீனாவில் இவற்றுக்கு தடை விதிக்கப்பட்டது போல இந்தியாவிலும் தடைவிதிக்கப்படும் என டில்லி உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் ஆட்சேபனைக்குரிய படங்கள் மற்றும் தகவல்கள் இடம் பெறுகின்றன. இவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடக்கோரி வழக்கு ஒன்றுதொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று நீதிபதி சுரேஷ்கைத் முன் விசாரணைக்கு வந்த போது அவர் சமூக வலைத்தளமான பேஸ்புக், கூகுள், தேடுபோறி (சர்ச் இன்ஜின்) போன்றவை. தங்கள் வெப்சைட்களில் ஆட்சேபனைக்குரிய படங்கள் மற்றும் தகவல்கள் இடம்பெறுவதை தவிர்க்க ஒரு செயற்பாட்டு முறை ஒன்றை உருவாக்க வேண்டும். அப்படி இல்லையெனில் இதுபோன்ற வெப்சைட்களுக்கு சீனாவில் தடைவிதிக்கப்பட்டது போல இந்தியாவிலும் தடை விதிக்கப்படும் என்றார். (14)

## பி.பி.சி. தொலைக்காட்சி சேவை பாரதத்திடம் மன்னிப்பு கோரவேண்டும்

நாட்டை இழிவுபடுத்தும் வகையில் நிகழ்ச்சி ஒளிபரப்பியது தொடர்பாக பி.பி.சி. தொலைக் காட்சி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. கிறிஸ்மஸ் தினத்தன்று பி.பி.சியில் ஒளிபரப்பான றொப்கியர் என்ற சிறப்பு நிகழ்ச்சியில் தொகுப்பாளர் ஜெர்மி கிளார்சன் இந்திய உணவுகள், ரயில்கள், கழிப்பறைகள் மற்றும் கலாசாரம் பற்றி இழி வாக பேசினார்.

அந்த நிகழ்ச்சி இன வெறியை தூண்டும் வகையில் இருந்ததாகவும் இது தொடர்பாக பி.பி.சி. தொலைக்காட்சி மன்னிப்பு கோருமாறும் பிரிட்டனில் உள்ள இந்திய தூதரகம் கடிதம் அனுப்பியுள்ளது. இந்திய தூதரகத்தில் பதில் அளிக்கப்படும் என்று பி.பி.சி. உறுதி அளித்துள்ளது.

இந்நிலையில் இவ்விவகாரத்தில் பிரிட்டன் அரசு தலையிடாது என்றும் பி.பி.சி. தான் இதற்கு தீர்வு காண வேண்டும் என்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கூறியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)



கடந்த 12 ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஊட்டி குருகுலம் பள்ளி மாணவ, மாணவியர் 370 பேர் விவேகானந்தராக தம்மை மாற்றி சாதனை செய்துள்ளமையை படத்தில் காணலாம்.

# இனவாத சக்திகளை தலைதூக்கவிடாது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## பிரபாகரனை விட ஆபத்தானது கூட்டமைப்பு என்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

அரசியல் தீர்வு குறித்து பேச ஐக்கிய தேசியக்கட்சிக்கு எவ்விதமான தார்மீக உரிமையும் கிடையாது. மீண்டும் நாட்டில் குழப்பத்தை உண்டாக்க சர்வதேசத்தில் உள்ள புலி உறுப்பினர்களை உள்நாட்டு சக்திகள் கையாள்கின்றன என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினதும் இனவாதக் கொள்கைகளுக்கு இலங்கை ஒரு போதும் அடி பணியாது. மீண்டும் ஒரு கிளர்ச்சிக்கோ பிரிவினைவாதத்திற்கோ இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

புலிகள் உயிருடன் இருக்கையில் நாட்டை ஒப்பந்த ரீதியாக ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் எழுதிக் கொடுத்தது. தற்போது இவர்கள் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் என்றும் கூறக்கூட தகுதியானவர்கள் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சிக்கோ கூட்டமைப்புக்கோ தேவையானவாறு தீர்வுகளை வழங்க முடியாது.

இலங்கையிலிருந்து தப்பித்துச் சென்று வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள புலி உறுப்பினர்களினால் நாட்டுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் உள்ளது. உள்நாட்டில் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற மாற்றுக்குழுவினரும் இணைந்து கொண்டுள்ளனர். சர்வதேசத்தின் புலிகள் இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு வகையில் உதவிகளை வழங்கி உள்நாட்டில் திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இதனாலேயே பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு துறைகளில் அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுந்துள்ளன. பிரபாகரனை விட ஆபத்தானவர்களாகவே கூட்டமைப்பும் எஞ்சியுள்ள புலி உறுப்பினர்களும் உள்ளனர். எனவே, இனவாத சக்திகளை தலைதூக்க விடாது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஆனால், இந்தியாவில் அவ்வாறு இல்லை. உள்நாட்டுக்கு வரும் எந்தவொரு இந்தியரையும் நாம் தாக்குவதில்லை. ஆனால்,இந்தியாவிலோ மிகவும் மோசமான முறையில் இனவாதம் கையாளப்படுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# கலந்துரையாடல்

(நல்லூர்)

காணி அமைச்சின் கீழுள்ள காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினால் நடப்பாண்டிற்கான வேலை திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலும் வருடாந்த ஒன்று கூடலும் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 18 ஆம் திகதி புதன் கிழமையும் கொழும்பு இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக காணி அமைச்சர் ஜனக தென்னக்கோன் பண்டார, காணிப் பிரதி அமைச்சர் கமல்நாத் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது, யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் காணிப் பண்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7-134)

# இலஞ்ச குற்றச்சாட்டில் கான்ஸ்டபிள் கைதானார்

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் பேரில் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரமொன்றை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொள்ளப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஹோமாகம- மாதம்பத பிரதேசத்திலுள்ள நபரொருவரிடம் இருந்து இவர் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(அ-2)

# யுத்தம் முடிவுற்றதனால் அரசிற்கு பாரியளவு நிதி மீதமாகின்றது

## சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிவுற்றதன் காரணமாக யுத்தத்துக்குச் செலவான பாரியளவு பணம் அரசுக்கு மீதமாகின்றது. இப் பணத்திற்கு என்ன நடக்கிறது என்று நாங்கள் கேள்வி எழுப்புகின்றோம்.

நாட்டின்சொத்துக்களுக்கும்வளங்களுக்கும் ஒரு சிலர் மட்டும் உரிமை கொண்டாடுவதற்கு இடம் அளிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை ஸ்ரீ மஹேந்திராராமை விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிவடைந்ததன் காரணமாக மீதமாகும் பெருமளவு பணத்தை உபயோகித்து நாட்டிலுள்ள சர்வ மதஸ்தலங்களையும் புனர் நிர்மாணம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கவலை தரும் விடயமாகும்.

ஐந்து இலட்சம் ரூபா செலவில் செப்பனிடக்கூடிய பாதைக்கு 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கும் அரசு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் பணத்தை வீண் விரயம் செய்கிறது என மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 04 . 1941

மறைவு 14 . 01 . 2010

## அமரர் மாணிக்கம் சிவஞானசுந்தரம்

அன்பாலும் பண்பாலும் எம் அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே நீங்கள் மீளாத்துயில் கொண்டு
ஓராண்டு ஓடி மறைந்து விட்டதையே நம்பமுடியவில்லை. எம்
ஆழ்மனதில் சோகம் ஆழ்கடல் போல் பரந்து மாமலை போல்
உயர்ந்து நின்ற போதும் நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் பிரகாசித்து கொண்டிருப்பதனால் உங்களை
மறக்க முடியாது தானே! நீங்கள் எங்களுடன் வாழ்ந்த
நாட்களும் நீங்காத நினைவுகளும் என்றும் நிலையானவை.
ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றி அனலிடைப்பட்ட புழுவாய்த்
துடிக்கும் எங்களுக்கு ஒப்பாக உங்களைப் போல் யாரைத்தான் காண
முடியும்? உங்கள் நினைவே எங்கள் உயிர் மூச்சாய் வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவழியா

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(7227)


# பாடசாலைகள் பௌதீக வளங்களை ஒழுங்காகப் பயன்படுத்துவது அவசியம்

## கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைக்குரிய பௌதீக வளங்கள் ஒழுங்காகப் பயன்படுத்தப்படுவது அவசியமென கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

பௌதீக வளங்கள் தொடர்பில் பாடசாலைகளின் தற்போதைய நிலை குறித்துக் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ஒரு சில பாடசாலைகளில் பௌதீக வளப்பற்றாக்குறை காணப்படுகின்ற போதிலும் பல பாடசாலைகளில் இருக்கும் பௌதீக வளங்கள் திட்டமிட்ட அமைப்புக்கு ஏற்ப ஒழுங்காகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் நிலை காணப்படுகின்றது. பாடசாலைகளுக்குரிய பௌதீக வளங்கள் திட்டமிட்ட ஒழுங்கமைப்புக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றபோது அவற்றினால் பாடசாலைச் சமூகம் பல வழிகளில் பயனடைய வாய்ப்புக் கிடைக்குமென்றார்.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் ஒரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு மாத்திரம் இப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற மனப்பாங்கிலிருந்து விடுபட்டு அவ்வப் பிரதேச மக்கள், பிரதிநிதிகள் தங்களுக்குக் கிடைக்கின்ற நிதிகளின் அல்லது நிதி உதவி செய்கின்றவர்களின் உதவியுடன் அப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதோடு அப்பாடசாலைகளுக்கு பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்க முன் வருவதன் மூலம் நாட்டிலுள்ள சில பிரதேசங்களிலும் தரமான வளங்கள் நிறைந்த பாடசாலைகளை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க முடியும்.

(அ-2)

## லண்டன்

# ஓய்வூதிய சீரமைப்பு திட்டம் தொழிலாளர்களால் நிராகரிப்பு

இங்கிலாந்து அரசு பொதுத்துறை தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய சீரமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அரசு கொண்டுவந்த இந்தத் திட்டத்தை பாதுகாப்பு அமைச்சக தொழிலாளர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன தொழிலாளர்கள் அனைவரும் ஒருமனதாக நிராகரித்துள்ளனர்.

இது குறித்து தொழிலாளர் அமைப்பின் பொதுச்செயலாளர் மெக்லஸ்கி, பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் நீண்டகாலம் தங்களது பணிகளை செய்துவருகின்றனர்.

ஆனால் பணி ஓய்வுக்காலத்தில் சிறிய தொகையை மட்டுமே ஓய்வூதியமாகப் பெறுகின்றனர். இதுவே நிராகரிப்புக்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

தொழிலாளர்கள் அவர்களுடைய தகுதிக்கு ஏற்றாற்போல் உரிய தொகையை பெற அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரப்படுகின்றது.

அரசின் இந்தச்சீரமைப்புத் திட்டத்தால் தொழிலாளர்கள் திருப்தியடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (14)

# அறுவைச்சிகிச்சைகள் எதுவுமின்றி கான்சர் கட்டி வெளியேற்றப்பட்டது



இங்கிலாந்தில் பெண் ஒருவர் இருமிய போது கான்சர் கட்டி வெளியே வந்தது. இதனால் அவர் பெரிய கண்டத்தில் இருந்து தப்பித்ததாக கூறப்படுகின்றது.

லண்டனைச்சேர்ந்த ஹிலாரி ஆஸ்பர்ன் (வயது -37). கடந்த சில நாட்களுக்கு முன்பு இவரது தொண்டையில் ஏதோ சிக்கியது போன்ற உணர்வு ஏற்பட்டிருந்தது. அப்போது வேகமாக இருமியபோதே எச்சிலுடன் சிறிய கட்டி ஒன்றும் வெளியே வந்து விழுந்துள்ளது.

இதனால் பயந்துபோன ஹிலாரி கட்டியுடன் மருத்துவமனைக்கு ஓடினார். உடனே டாக்டர்களிடம் விபரத்தை கூறினார். ஹிலாரியின் தொண்டையை டாக்டர்கள் பரிசோதித்தனர். கட்டியை சோதனை கூடத்துக்கு அனுப்பி வைத்தனர். அதில் கான்சர் பரவி இருப்பது தெரியவந்துள்ளது. பொதுவாக தொண்டையில் வரும் கான்சர் கட்டிகளை சிக்கலான அறுவைச்சிகிச்சை மூலமாகத்தான் வெட்டி எடுக்கமுடியும்.

அதிலும் 100 சதவீத வெற்றி கிடைக்கும் என்பதைக்கூறமுடியாது. அறுவைச்சிகிச்சைக்குப் பின்னர் ஹீமொதெரபியும் தேவைப்படும்.

இது எதுவும் இல்லாமல் ஹிலாரிக்கு தாமாக கட்டி வெளியே வந்ததால் அவர் பெரிய கண்டத்தில் இருந்து தப்பித்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். உலகம் முழுவதும் இதுபோன்று 30 சம்பவங்கள்தான் நிகழ்ந்துள்ளன என்று டாக்டர்கள் கூறினர். அபூர்வமாக உயிர்தப்பிய ஹிலாரிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (14)




# சர்தாரி நாடு திரும்பினார்

பாகிஸ்தானில் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் அவசரமாக டுபாய் சென்ற பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி பயணத்தை இரத்துச் செய்து விட்டு நாடு திரும்பியுள்ளார்.

பாகிஸ்தானில் அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையேயான மோதல் வலுத்து வருகிறதால் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. அங்கு இராணுவ புரட்சி ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனிப் பட்ட விடயங்களுக்காக அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி நேற்று டுபாய் சென்றிருந்தார்.

இதனால் அவரது பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. இந்நிலையில் ஆசிப் அலி சர்தாரி தனது பயணத்தை இரத்து செய்துவிட்டு பாகிஸ்தான் திரும்பியுள்ளார்.

அவர் பாகிஸ்தான் திரும்பிவிட்டதாக ஜனாதிபதி மாளிகை செய்தி தொடர்பாளர் தகவல் வெளியிட்டுள்ளார். (14)



எகிப்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகார்டர் (இடது) தலைநகர் கெய்ரோவில் முஸ்லிம் மதத்தலைவர் முகம்மது பேடியை சந்தித்தார்.

## பதிலுக்கு பதில்


சோமாலியாவில் இயங்கும் ஷபாப் தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் கென்ய இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சோமாலியா தீவிரவாதிகள் எல்லையில் உள்ளகென்யாவின்ஜெரில்லே நகருக்குள் புகுந்து அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். அதில் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் கடத்தப்பட்டனர்.

மேலும் கென்யாவில் இருந்து வாகனங்களும் தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் ஆயுதங்களையும் சோமாலிய தீவிரவாதிகள் கொள்ளையடித்து சென்றுவிட்டனர் என டுவிட்டர் இணையதளத்தில் ஷாபாப் தீவிரவாதிகள் தெரிவித்தனர். (14)

## அமெரிக்கா

# விக்கிலீக்ஸ்'க்கு தகவல் வழங்கிய இராணுவ ஆய்வாளருக்கு தண்டனை?



(வோஷிங்டன்)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்கு இரகசிய தகவல்களை வழங்கிய அமெரிக்கப் படையதிகாரி தண்டிக்கப்பட வேண்டுமென இராணுவம் அறிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ ஆய்வாளர் பிராட்லீ மானிங்கிற்கு எதிராக இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான இரகசிய தகவல்களை குறித்த அதிகாரி இவ்வாறு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பிராட்லீக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படக்கூடுமென குறிப்பிடப்படுகிறது.

தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2010 மே மாதம் பிராட்லீ கைது செய்யப்பட்டார். பிராட்லீ குற்றச்செயல்களில் ஈடுபட்டமையை நிரூபிப்பதற்கு போதியளவு ஆதாரங்கள் காணப்படுவதாக இராணுவ நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க இராணுவ வரலாற்றில் ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவாக விக்கிலீக்ஸ் இராணுவ இரகசிய கசிவு கருதப்படுகின்றது.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட யுத்தம் தொடர்பில் விக்கிலீக்ஸ் சுமார் 40 இலட்சம் ஆவணங்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிராட்லீ இந்தக் குற்றச்செயல்களை புரியவில்லை எனவும் அவரது உயரதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் பிராட்லீ சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். (14)

## அமெரிக்காவிற்கு அடிபணிந்தா?

# ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதியை ஜப்பான் குறைத்துக்கொள்ள நடவடிக்கை

அமெரிக்காவின் வார்த்தைக்கு அடிபணிந்த ஜப்பான் ஈரானிலிருந்தான எண்ணெய் இறக்குமதியைக் குறைத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க திறைசேரியின் செயலாளர் திமோதி எப் கீத்னரின் ஜப்பானுக்கான விஜயத்தின் பின்னரே அந்நாட்டு மத்திய வங்கியின் அதிகாரிகள் இம்முடிபை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.


ஜப்பான் தனது எண்ணெய்க்கான தேவையில் 10 வீதத்தை ஈரானிலிருந்தே இறக்குமதி செய்கின்றது. இதேவேளை ஐரோப்பிய நாடுகளுக்கான ஈரானின் எண்ணெய் இறக்குமதி மீது ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் தடை விதிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் மீதான பொருளாதாரத் தடையினை விரிபுபடுத்தி அதனை தனிமைப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே ஜப்பானை இம்முடிபை மேற்கொள்ள அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ளதாகத் தெரிகின்றது.

அத்துடன் அமெரிக்க திறைசேரியின் பிரதிச் செயலாளர் நீல்வோலின் இதே நோக்கத்திற்காகவே பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (14)

# இறந்தவர்கள் மீதும் இரக்கமற்ற செயல்; ஆப்கானிஸ்தானில் அரங்கேறிய சம்பவம்



ஆப்கானில் நடந்த தாக்குதலில் அங்கு கொல்லப்பட்ட தலிபான் போராட்டக்காரர்களின் இரத்தம் தோய்ந்த சடலத்தின்மீது அமெரிக்க இராணுவவீரர்கள் சிறுநீர் கழித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் வீடியோ காட்சி ஒன்று வெளியாகியிருக்கின்றது.

இது உலகத்தின் பல நாடுகளில் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் கடும் அதிருப்தியைஏற்படுத்தியிருக்கின்றது.

தலிபான் போராட்டக்காரர்களை ஒடுக்கும் விதத்தில் 20 ஆயிரம் அமெரிக்க இராணுவவீரர்கள் ஆப்கானிஸ்தானில் களமிறக்கப்பட்டனர். அவர்கள் காந்தகார் மற்றும் ஹெல்மாண்ட் மாகாணப் பகுதிகளில் தலிபான்களை வேட்டையாடினர்.

இந்த ஒன்லைன் வீடியோ காட்சியில், இரத்தவெள்ளத்தில் மிதந்த தலிபான் வீரர்கள் சடலம் மீது மகிழ்ச்சிக் களிப்பில் சிறுநீர் கழிப்பது அப்படியே ஒளிபரப்பப்பட்டது. அதில் ஒரு அமெரிக்க வீரர் நமக்கு ஆனந்தம் தரும் நாள் என்று எக்காளமாகக் கூறுவதும் வெளியாகியிருக்கிறது. இது உலகெங்கும் உள்ள பலரை முகஞ்சுளிக்கவைத்துள்ளது. இஸ்லாமிய நாடுகள் கொதிப்படைந்துள்ளன.

ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இக்காட்சி எங்களுக்கு மன உளைச்சலைத் தந்திருக்கின்றது. இறந்தவர்கள் சடலத்தை அவமானப்படுத்தும் இச்செயல் மனிதாபிமானம் அற்றது என்று கூறியுள்ள தலிபான் அமைப்பு தகவல் தொடர்பாளர் முஜாகீது, இது காட்டுமிராண்டித்தனமானது. கடந்த 10 ஆண்டுகளில் இம்மாதிரி எத்தனையோ சம்பவங்கள் அரங்கேறியுள்ளன என்று அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தகவல் தொடர்பாளர் பக்டன் ஜான் கிர்பி கருத்துத் தெரிவிக்கையில், இதை யார் செய்திருந்தாலும் அது மிகத் தவறானது. இராணுவத்தைச் சார்ந்தவர்கள் இம்மாதிரி செயலில் ஈடுபடக்கூடாது. இவ்விடயத்தை முழுவதும் விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (14)

மக்கள் எல்லாவற்றையும் மிக்க கவனத்துடன் நிதானித்துப் பார்த்தால் தீமையிலும் நன்மைகள் இருக்கக் காணலாம். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆசிரியர் இடமாற்றம் - விசாரணை யமதர்மன் தலைமையில் ஆணைக்குழு

ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பில் ஆராய்ந்த யமதர்மராசசபை பின்வரும் முடிபுகளை அறிக்கையிட்டு சபைக்கு வாசித்துக் காட்டுகிறது.

சகலரும் இத்தால் அறிக,

இங்கு நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து

யமன்: வடமாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் மிகவும் சிக்கலானது.

இதனால் சகல தரப்புகளும் மனங்குழம்பியுள்ளனர் என்பதை இச்சபை ஏற்றுக் கொள்கின்றது. அதேநேரம் வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றக் கோரிக்கை நியாயமானதும் ஏற்புடையதுமாகும்.

பெண் ஆசிரியர்களின் இடமாற்ற விடயத்தில் அவர்களின் சொந்தப் பிரச்சினையை உற்றுக் கேட்பதுடன், புரிந்துகொள்ளவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என இச்சபை கேட்டுக் கொள்கின்றது.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றம் எந்த வகையிலும் எவரையும் பாதிக்கலாகாது. பாதிப்பேதும் இருப்பின் அது கல்விக்கான இலக்கை அடைவதில் பாதகத்தை ஏற்படுத்தும்.

எனவே இடமாற்றம் தொடர்பான அதிகாரங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் அடங்கிய குழுவிற்கு வழங்க வேண்டும்.

இடமாற்றத்தில் மேன்முறையீடு ஏதேனும் இருக்குமாயின், அந்த மேன்முறையீட்டு வடக்கு மாகாண் ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் கொண்ட குழு பரிசீலிக்க வேண்டும் என இச் சபை பரிந்துரை செய்கின்றது.

மேலும், தனித்து ஆசிரியர்களை அங்கும் இங்கும் மாற்றுவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று வடக்கு மாகாண சபை நிர்வாகம் நினைப்பதும் இப்பிரச்சினையை சிக்கல்படுத்துகின்றது.

இப்பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்காக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துமாறு ஆளுநருக்கு இச்சபை பரிந்துரை செய்கிறது.

I வன்னியில் உள்ள தொண்டராசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கி அவர்களை ஆசிரிய கலாசாலைக்கு அனுப்பி தகைமையுடையவர்களாக்குதல்,

II யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா கல்வியியற் கல்லூரிகளில் இறுதிப் பரீட்சை எழுதியவர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கி அவர்களை வன்னிப் பகுதிக்கு அனுப்புதல்,

(நாட்டின் பொது நடைமுறைக்கு அப்பால், வடபகுதிக்கு இதனை விசேடமாக மேற் கொள்ள வேண்டும்)

III வன்னிப் பகுதியில் கடந்த காலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் வன்னிப் பகுதியில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களுக்கும் இடர்காலக் கொடுப்பனவை விசேடமாக வழங்க வேண்டும்.

IV யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று குறைந்தது 5 ஆண்டுகள் கடமையாற்றுவதற்கு தாமாக முன்வரும் ஆசிரியர்களுக்கு முக்கியமான இடங்களில் ஆகக்குறைந்தது ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.

(படையினருக்கு வன்னியில் காணி வழங்கும் போது ஆசிரியர்களுக்கு வழங்க முடியாதெனக் கூறுவதை இச்சபை ஒருபோதும் ஏற்காது)

எனவே இவற்றை நடைமுறைப்படுத்தி ஆசிரியர் இடமாற்றத்தை ஒழுங்குபடுத்த பரிந்துரைத்து இச்சபை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது.

# இந்திய -இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு; இருநாடுகள் இடையேயும் திருப்பு முனை அறிகுறிகள்

(ஜெருசலேம்)

இந்திய வெளியுறவுமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் இரண்டு நாட்கள் இஸ்ரேலியப் பயணத்தின்போது இரு தரப்பு உறவிலும் புதிய திருப்புமுனை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

இஸ்ரேலுக்கு வரும் அரசு விருந்தினர்களை உபசரிக்கும் வழக்கமான நடைமுறைகளிலிருந்து விலகி மிக நெருங்கி நட்பு நாடுகளுக்கு அளிக்கப்படும் விரும்தோம்பல் கிருஸ்ணாவுக்கும் அளிக்கப்பட்டது இதை உறுதி செய்துள்ளது.

முக்கிய விருந்தினரான கிருஸ்ணா, இஸ்ரேலின் நட்புறவை புரிந்து கொள்ளும் வகையில் சிறப்பு நிகழ்வுகள் நடந்தேறின.

கிருஸ்ணா புறப்படும்வரை அருகிலிருந்ததும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இஸ்ரேல் ஜனாதிபதி சிமோன் பெரஸ் உலகிலேயே மகத்தான ஜனநாயக நாடு இந்தியா என்று புகழ்ந்தார்.





மேலும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தார்.

எனினும் ஐ.நா.சபையில் பாலஸ்தீனம், ஈரான் உள்ளிட்ட விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு வருத்தம் தெரிவிக்கும் எவ்வித சலனமும் இந்த இரண்டுநாள் பயணத்தில் தென்படவில்லை. இதை ஒருவர் மீது மற்றொருவர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டு வரும் முதிர்ச்சியாகவும் இஸ்ரேலிய அரசியல் வட்டாரங்கள் வர்ணிக்கின்றன.

### பாகிஸ்தான் நிலைப்பாடு

காஷ்மீர் விவகாரத்தில் இந்திய நிலைப்பாட்டை எதிர்க்கும் வகையில் இஸ்ரேல் உடனான உறவை பாகிஸ்தான் மேம்படுத்த வேண்டும் என்று பர்வேஷ் முஷாரப் கூறியிருந்தார். அதை பற்றி பேசிய கிருஸ்ணா, இந்த விவகாரத்தில் இஸ்ரேல்தான் தீர்மானிக்க வேண்டும். அதில் இந்தியா தலையிடாது என்றார்.

### ஈரானின் அணுத்திட்டம்


ஈரானின் அணுத்திட்டங்கள் தொடர்பாக கிருஸ்ணா தெளிவாகக் கூறியது, இது தொடர்பாக நாங்கள் ஸ்திரமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளோம். இந்தியா தனது மின்சக்தி தேவைக்கு அணு திட்டங்களை நாடியுள்ளது. அதைப்போல் அனைத்து நாடுகளும் தங்களை மேம்படுத்தி கொள்ள உரிமையுண்டு.

### வர்த்தகம்

இந்த ஆண்டுக்குள் இறுதி செய்யபட இருக்கும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டால் இருதரப்பு வர்த்தக அளவும் பல மடங்கு அதிகரிக்கும். மேலும் தமர் லெவியதான் எரிவாயு வயல்களை அகழாய்வு செய்ய இந்திய நிறுவனங்களின் கூட்டுக்கு இஸ்ரேல் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தியாவுடனான உறவு மிகச் சிறந்த ஒன்று என்று வர்ணித்த இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் அவிக்டோர் லைபெர்மென் கடந்த இருபதாண்டு கால ஒத்துழைப்பால் விளைந்த பலன்களை ஒன்று திரட்டி அடுத்த இருபது ஆண்டுகளுக்குத் தேவையான செயற்றிட்டம் வகுக்க வேண்டும். அரசியல் உட்பட ஒத்துழைப்புக்கான இடங்களையும் அதிகரிக்க வேண்டும் என்றார். (அ-2)

## திருவெம்பாவை 16



திருச்சிற்றம்பலம்

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்துஎம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடி
மேற்
பொன்அம் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

*தோழியர்: மேகமே! நீ பரந்து விரிந்த மிக நீண்ட அற்புதமான கடலின் நீரை எடுத்துக்கொண்டு உனது நிறம்மாறி உமையவள் போல் கறுத்துப் போகின்றாய். அதேநேரத்தில் அவளின் இடையைப் போல மின்னுகின்றாய். அன்னையவள் அணிந்துள்ள திருவடியின் அணிகலன் போல ஓசை எழுப்புகிறாய். அவளின் அழகிய புருவம் போல் வானவில்லாக வளைந்து காட்சி தருகிறாய். உன்னை என்ன என்று சொல்ல? என்றும் உமையம்மையுடன் சேர்ந்து சிவபெருமான் பக்தர்களுக்கு உதவிசெய்வது போலும் உமையம்மை தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு உதவும் திறன் போலும் நீ கருணை கொண்டு நீரைப் பொழிகிறாயே என்ன உனது விந்தை என்று பாடுகிறார்.*

## மின்சாரத் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் வரும் 16-ம் திகதி திங்கட்கிழமை, 18-ம் திகதி புதன்கிழமை, 20-ம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடி பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் வரும் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 21 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், குப்பிளான் , மயிலங்காடு, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், ஏழாலை தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி, கோண்டாவில் C.T.B டிப்போ அண்டிய பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நமக்குத் தேவையான மூன்று



உன் உடலில் ஏற்பட்டுள்ள கறையைப்பற்றி கவலைப்படாதே. இறைவன் என்னும் கருணைக்கடலில் மூழ்கி எழுந்தால் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

உங்களிடம் அன்பு இருந்தால் ஆகாத செயல் என்று எதுவுமில்லை. நீங்கள் தன்னலத்தை துறந்துவிட்டால் உங்களை எதிர்க்கும் சக்தி ஏதுமில்லை.

நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். அதனால், புனிதமும் பூரணத்துவமும் உங்களிடம் நிறைந்திருக்கிறது.

அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும் அது மீண்டும் நம்மை வந்தடைந்துவிடும்.

ஒட்டகம் முள் செடியைச் சாப்பிடும் போது வாயிலிருந்து இரத்தம் சொட்டும். இருந்தாலும் உண்பதை நிறுத்துவதில்லை. அதுபோல உலகத்தார் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானாலும் உலகப்பற்றை அவர்கள் விடுவதில்லை.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம்.

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண

# த.தே.கூ.நேர்மையாக செயற்படுகின்றதா?

## சந்தேகம் வெளியிடுகின்றார் ரஜீவ எம்.பி



(கொழும்பு)

அரசியல் அமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் இறுதியாக பாராளுமன்றத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ளவேண்டும். அதேபோல பிரச்சி னைக்கு எட்டப்படும் தீர்வு எத்தகையதாக இருந்தாலும் அது இறுதியாக பாராளு மன்றத்தின் ஊடாக செல்ல வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு நேர்மையாக செயற்படுகின்றதா என்பதில் பாரிய சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனால் அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தையை தொடர்ந்து முன்கொண்டு செல்லப்போவதில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எங்கும் தெரிவித்ததாக நாங்கள் அறியவில்லை என ஆளும் கட்சியின் பேச்சு வார்த்தை குழுவின் உறுப்பினரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் அர சாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த் தைகள் எதிர்வரும் தினங்களில் நடைபெற வுள்ளன. பேச்சுக்கள் நடைபெறாது என எந்தப் தரப்பும் குறிப்பிடவில்லை. அப்படி யானால் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும். அதாவது அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் இடையி லான பேச்சுக்கள் தொடர்பில் பல்வேறு தரப் புக்கள் பல்வேறு விதமான எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளன. எனவே இரண்டு தரப்புக் கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறுவது அவசியமாகும்.

மேலும் பேச்சுக்கள் தொடர்ந்து இடம் பெற வேண்டியதன் அவசியத்தை இரண்டு தரப்பினரும் உணர்ந்துள்ளனர்.எனவே பேச் சுக்களில் ஸ்தம்பிதநிலை ஏற்படும் என நான் கருதவில்லை.

அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்புக்களின் பின்னர் இரண்டு தரப்பினரும் பல்வேறு கருத்துக் களை வெளியிடலாம். ஆனால் பேச்சுக்கள் இடம்பெறவேண்டும் என்பதில் அனைவருக் கும் உடன்பாடுகள் உள்ளன என விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரை யாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாட சாலையின் பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பாடசாலை நல னில் அக்கறைகொண்ட பெற்றோர், ஆசிரி யர்கள், பழைய மாணவர்கள் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி இ.முத்துக்குமாரன் அறிவித்துள்ளார். (அ)

## மத்தியஸ்தர் சபையின் வழக்குகள் இன்று

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை யினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடை பெற இருந்த பிணக்கு சம்பந்தமான கலந் துரையாடல்கள் இன்று சனிக்கிழமை நடை பெறும் என மத்தியஸ்தர் சபை தலைவர் இ.மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடல் ஏனைய கிழமை களில் வழமைபோல் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-7-134)

## நிறுத்தலளவைக் கருவிகள் முத்திரையிடப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு மற்றும் நயினாதீவு பிரதேசங்களுக்கான நிறுத்தலளவுக் கருவிகள் முத்திரையிடப் படவுள்ளன என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசாவுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய இம் முத்திரையிடப்படும் நிகழ்வு வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மக்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை, மறுநாள் செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரையும் வேலணை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

புங்குடுதீவு பகுதிக்கான முத்திரையிடும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை வேலணை பிரதேச சபை உப அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நயினாதீவுக்கான முத்திரையிடும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் ஒரு மணி வரை வேலணை பிரதேச சபை உபஅலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.இதற்கு சகல வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கி கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-7)

## விலங்குகளை பலியிட்டு பூஜை செய்வது குறித்து இந்து புத்தகங்களில் இல்லை

### மேர்வின் தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று முறை புத்த பகவான் விஜயம் செய்த பூமியை அப்பாவி விலங்குகளின் இரத்தத்தினால் புனிதமற்ற பூமியாக மாற்ற, எவருக்கும் இடமளிக்க போவதில்லை என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித் துள்ளார்.

தனக்கும் தனது சகாக்களுக்கும் காளி மயம்மனின் சாபம் கிடைத்துள்ள்தாக முன் னேஸ்வரம் பிரதான பூசகர் தெரிவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

முன்னேஸ்வரம் ஆலயத்தின் பூசகரின் பொறுப்பற்ற கருத்துக்களை தான் பத்திரிகை களில் பார்த்ததாகவும் விலங்குகளை கொன்று இரத்தத்தினால் புனிதமற்ற இடமாக மாற் றப்பட்ட இடங்களில் தெய்வங்கள் இருப்பதாக இந்து மதத்தில் எந்த இடத்திலும் குறிப் பிடப்படவில்லை.

விலங்குகளை பலியிட்டு கடவுளுக்கு பூஜை செய்வதன் மூலம் ஆசீர்வாதம் கிடைக் கும் என நான் ஒருபோதும் விசுவாசிக்க வில்லை. இதனால் பலி பூஜைகளுக்கு உட் படுத்தப்படும் விலங்குகளை காப்பாற்ற தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படு வேன். இவ்வாறு செயற்படும் நபர்களுக்கு கடவுளின் சாபம் உண்டாகும் என எந்த மதத் திலும் குறிப்பிடப்படவில்லை எனவும் அமைச் சர் கூறியுள்ளார். (அ-2)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன் றத்தின் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு உரும் பிராய் சந்தி ஸ்ரீஜயப்ப சுவாமி தேவஸ் தர்னத்தில் தேவஸ்தான குருசுவாமி சிவஸ்ரீ தாணுவாசுதேவ குருக்கள் தலை மையில் நடைபெறுகின்றது என பரிபா லன சபை தெரிவித்துள்ளது. (அ-7)

## பட்டிப் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டிப்பொங் கல் விழா- கோமாதா உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகர் சத்திரம் ஞானவைர வர் ஆலயத்தில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவாணந்தா, சிறப்பு விருந் தினராக யாழ்.மாநகரசபை முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்க ளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

## களுத்துறை -அளுத்கம தண்டவாளத்தின் புனரமைப்பு ஆரம்பிக்கப்படவில்லை

### புகையிரத தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

களுத்துறையில் இருந்து அளுத்கம வரை புகையிரத சேவைகள் தண்டவாள புனர மைப்பு பணிகளுக்காக நிறுத்தப்பட்ட போதி லும் தண்டவாள புகையிரதப் பணிகள் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை என புகையிரத தொழிற்சங்கங்கள் குற்றஞ்சுமத்துகின்றன.

இம்மாதம் முதலாம் திகதி களுத்துறை யில் இருந்து அளுத்கம வரையான புகை யிரத தண்டவாள புனரமைப்பு பணிகளுக் காக நிறுத்தப்பட்டிருந்ததாக ரயில் சேவை தொழிற்சங்கத்தின் ஒன்றிணைந்த முன் னணியின் செயலாளர் சம்பத் ராஜித்த தெரி விக்கின்றார்.

எனினும் இதுவரை தண்டவாள புனர மைப்பு ஆரம்பிக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கரையோர புகையிரத சேவைகள் நிறுத்த ப்பட்டமையினால் பயணிகள் பாரிய அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ரயில்வே திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்கவிடம் வினவிய போது, தண்டவாள புனரமைப்பு பணிகள் ஆரம்பிக் கப்படாத போதிலும் அதன் முதற்கட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். (அ-2)

## போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் அங்குரார்ப்பண விழா

பாடசாலை போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்-2012 அங்குரார்ப்பண விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு வல்வெட்டித்துறை சிவகுரு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வியமைச்சர் பந்துல குணவர்த் தன, சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, பிரதிக் கல்வி அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலையின் கணனி அறைத்திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.வி.மகேந்திரன் கலந்து சிறப் பிக்கவுள்ளார் என அதிபர் வி.கே. ரவீந்திர ராசா அறிவித்துள்ளார். (அ)


## சமய சொற்பொழிவு

(யாழ்ப்பானம்)

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங் கத்தின் மாதாந்த சமய சொற்பொழிவு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற ள்ளது.

இந்நிகழ்வின் போது இந்து சமயத்தின் மகிமை என்னும் தொனிப்பொருளில் ஆசி ரியர் ச.தயானந்தன் சொற்பொழிவொ ன்றை ஆற்றவுள்ளார். (2-7)

# சிதறியது இந்தியா; சீறுகிறது அவுஸ்திரேலியா



அதிரடி சதம் அடித்த மகிழ்ச்சியில் வோர்னர்

(பேர்தி)

ஹில்பென்ஹயூஸ்–சிடில் கூட்டணியின் வேகத்தில் சிக்கிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலில் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையுள்ள நிலையில் மூன்றாவது டெஸ்ட் நேற்று பேர்த்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் இந்திய அணியில் சுழல் பந்துவீச்சாளர் அஸ்வின் நீக்கப்பட்டு வினேய் குமார் டெஸ்டில் அறிமுக வீரராக களமிறக்கப்பட்டார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தார்.

அடுத்து களமிறங்கிய ராகுல் டிராவிட் 9 ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து வந்த சச்சின் டெண்டுல்கர் 15 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து ஓரளவு நம்பிக்கையளித்த காம்பீரும் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 63 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த லக்ஸ்மன்–ஹோலி ஜோடி நிதானமாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடி 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது விராட் ஹோலி 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.





அடுத்து தோனி களமிறங்க, மறுமுனையில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 138 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து வினேய் குமார் 5, தோனி 12, சகீர்கான் 2, இஷாந்த் சர்மா 3 வரிசையாக ஆட்டமிழக்க இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் ஹில் பென்ஹயூஸ் 4 விக்கெட்டுக்களையும் சிடில் 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரார்க் 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஹோவன்–வோர்னர் ஜோடி அபார ஆட்டத்தை வழங்கினர்.

இதில் அதிரடியைத் தொடர்ந்த வோர்னர் 36 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார். இந்த ஜோடியை பிரிக்க இந்திய அணித்தலைவர் தோனி பந்துவீச்சில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் டேவிட் வோர்னர் 84 பந்துகளில் தனது 2ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 149 ஓட்டங்களை சேர்த்தது.

இதில் டேவிட்வோர்னர் 104 ஓட்டங்களையும் ஹோவன் 40 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## மன்செஸ்டர் சிட்டி அணி அதிர்ச்சித் தோல்வி

(லண்டன்)

இங்கிலீஷ் கார்லிங் கோப்பை கால் பந்து அரையிறுதியின் முதல் போட்டியில் மன்செஸ்டர் சிட்டி அணி தோல்வியடைந்தது.

லண்டனில் நடக்கும் இத்தொடரின் அரையிறுதிக்கான முதல்போட்டியில் மன்செஸ்டர் சிட்டி, லிவர்பூல் அணிகள் மோதின.

போட்டியின் 13ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை சரியாக பயன்படுத்திய ஸ்ரீபன் ஜெராட் கோலாக மாற்றினார். இதன்பின் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில் 0:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிட்டி அணி அதிர்ச்சி தோல்வியடைந்தது.

## முதலிடம் வாய்ப்பை தவறவிட்டார் கிவிடோவா

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் நடப்புச் சம்பியன் சீனாவின் லி நா, 2ஆம் நிலை வீரங்கனை செக்குடியரசின் பெட்ரா கிவிடோவா ஆகியோர் மோதினார்கள். பரபரப்பான இந்த மோதலில் லி நா 1:6, 7:5, 6:2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இந்தப்போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றால், வோஸ்னியாக்கிடம் இருந்து முதலிடத்தை பறித்துவிடும் வாய்ப்பு கிவிடோவாவுக்கு கிடைத்தது. ஆனால் அவரது கனவை லி நா தடுத்துவிட்டார்.

## காயம் தந்த சோகம்

விளையாட்டு நட்சத்திரங்களுக்கு காயம் ஏற்பட்டு விட்டால் அதிலிருந்து மீள்வது மிகவும் கடினம் இது ரஷ்ய டென்னிஸ் புயல் மரியா ஷரபோவாவுக்கும் பொருந்தும்.

சர்வதேச டென்னிஸ் வரலாற்றில், ரஷ்யாவுக்கு பெருமை தேடிதந்தவர்களில் மரியா ஷரபோவா முக்கிய மானவர் 6.2 அடி உயரம் கொண்ட இவர் 2001 இல் டென்னிஸ் அரங்கில் காலடி வைத்தார்.

கடந்த 2004 இல் நடந்த விம்பிள்டன் தொடரில் அசத்திய இவர், தனது முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார். அதன்பின் 2006இல் யு.எஸ்.ஓபன், 2008இல் அவுஸ்திரேலியஓபன்எனதனதுகிராண்ட்ஸ்லாம் பட்டத்தை மூன்றாக உயர்த்தினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு இறுதியில், தோல் பட்டை காயம் காரணமாக பீஜிங் ஒலிம்பிக் உட்பட நிறைய தொடர்களில் இருந்து விலகினார். அதன்பின் 2009, 2010, 2011 இல் நடந்த தொடர்களில் பெரியளவில் சோபிக்கவில்லை.

கடந்த ஆண்டு விம்பிள்டனில் மட்டும் இறுதிப்போட்டிவரை முன்னேறினார். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பான் பசுபிக் சம்பியன் ஷிப் (டோக்கியோ), சீனா ஓபன், டபிள்யூ.டி.எ, சம்பியன் ஷிப் (இஸ்தான்புல்) உள்ளிட்ட தொடர்களிலிருந்து விலகினார்.

புத்தாண்டிலும் இவரது காயத்தின் சோகம் தொடர்கிறது. தற்போது பிரிஸ்பேனில் நடக்கும் சர்வதேச டென்னிஸ் தொடரிலிருந்து விலகினார். இதனால் அடுத்து நடக்கவுள்ள ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான, அவுஸ்திரேலிய ஓபனில் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

## தோனிக்கு மீண்டும் வாய்ப்பு பிரைன் லாரா ஆலோசனை

(மும்பை)

இந்திய அணித்தலைவர் தோனிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் லாரா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், தோனியில் தலைமையில் இந்திய அணி இருபது–20 உலகக்கிண்ண மற்றும் ஒருநாள் போட்டிகளில் சாதனை படைத்துள்ளது. அவரது திறமைக் காரணமாக அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும். இதற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும்.

இங்கிலாந்து தொடர் முடிவுகளும் தற்போது அவுஸ்திரேலிய பயணமும் அனைத்து இந்தியக்கிரிக்கெட்ரசிகர்களும்வருத்தம்அடைவார்கள்.

ஆனால் அணித்தலைவர் என்ற முறையில் அவருக்கு சரியான அணியை வழங்க வேண்டும். தற்போது கடினமான சூழ்நிலையில் இந்திய அணி உள்ளது.



தற்போது தொடர் இந்தியாவில் நடந்தால் போட்டி முடிவுகள் வேறுமாதிரி இருந்திருக்கும் என கூறியுள்ளார்.

## ஒருநாள் தொடர் யுவராஜ் நீக்கம்

(புதுடில்லி)

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு தொடரில் பங்கேற்கும் இந்திய அணியிலிருந்து யுவராஜ் சிங் நீக்கப்பட்டுள்ளார்.

நுரையீரலில் ஏற்பட்டுள்ள கட்டி குணமடையாததால் அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவரும், கலைப்பீட பதில் பீடாதிபதியுமான

**பேராசிரியர் V.P.சிவநாதன்** அவர்களின் அன்பு மாமனார்

### அமரர் பொன்னையா ஸ்ரீநடராஜ்

அவர்கள் 13.01.2012 அன்று காலமாகியதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,**
**பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(7302)


## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு உதய சூரியன் சன சமூக நிலையத்தின் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நிலைய வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களின் கருத்துரை, பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-11)

## தமிழ்...

வர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கே ஆரம்ப கட்டப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. பொலிஸ் சேவையில் அதிகளவான தமிழ்ப் பேசும் இன்ஸ் பெக்ரர்கள் இணைத்துக் கொள்ளப் பட்டமுதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

எதிர்காலத்தில் தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளை பொலிஸ் கான்ஸ்டபிள்களாக பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள் ள்வுள்ளதாக பொலிஸ் தலைமை யகம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## அமைச்சரவை...

அதேவேளை, சபாநாயகர் பதவிக்கு அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, குணசேகர ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

சபாநாயகராக நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டால், அவரது சபைத் தலைவர் பதவிக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அல்லது சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ பிரதி அமைச்சராக நியமிக்கப் படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## டெங்குக்கு...

இதேவேளை டெங்கு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

## சர்வதேச...

பெற்றுத்தரக்கூடிய பொங்கலாக அமையவேண்டும் என்பதே உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகவும் வேண்டுதலாகவும் உள்ளது.

கடந்த 62 ஆண்டுகளுக்கு மேலாக தனது இனத்தின் விடுதலைக்காக போராடி வரும் தமிழினம் இரண்டு இலட்சத்திற்கு மேலான பொதுமக்களின் உயிர்களை பலிகொடுத்ததுடன் 89 ஆயிரம் விதவைகளையும் 25 ஆயிரம் அங்கவீனர்களையும் உருவாக்கியுள்ளது.

மேலும், சிறைச்சாலைகளிலும் வதை முகாம்களிலும் இன்றும் தமிழ் பெண்களும் சிறுவர்களும் அங்கவீனர்களும் துன்பங்களை அனுபவித்துவரும் அவலங்கள் நிறைந்த ஆண்டாகவே 2012ம் ஆண்டின் தைப்பொங்கல் நாளும் உதிக்கவிருக்கின்றது.

எங்களுக்கான சமாதானத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடந்த ஒரு வருடங்களாக அரசுடன் நாங்கள் நடத்திக் கொண்டிக்கும் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தங்களது சர்வதேச பிரசாரங்களுக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொண்டு தமிழர்களையும் சர்வதேசத்தையும் பேச்சுவார்த்தை என்ற மாயையைக் காட்டியே இன்றுவரை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது என அவரது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (எ-5)

# பட்டதாரி ஆசிரிய உதவியாளர்கள் பயிற்சி பெறத் தேவையில்லை!

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய உதவியாளர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்கள் ஆசிரிய கலாசாலைகளில் இணைய வேண்டியதில்லை என அறிவிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் வட மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் 2012 ஆம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஏப்ரல் முதல் வாரத்தில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிநெறி 2 வருடங்கள் கொண்டதாக இருக்கும்.

இப்பயிற்சிநெறியினைப் பூர்த்தி செய்த பின்னரே இவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்கப்படவுள்ளனர்.

இவ்வகை நியமனம் கிடைத்தவர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்கள் ஆசிரிய கலாசாலையில் இணைந்துகொள்ளத்தேவையில்லை என வட மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய உதவியாளர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்களை நேரடியாக ஆசிரியர் சேவைக்குள் உள்வங்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வட மாகாண கல்வி அமைச்சின் முன்னைநாள் செயலாளர் எல்.இளங்கோவனிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதனை ஏற்றுக் கொண்ட செயலாளரிடம், பொதுச் செயலாளர் இது பற்றி வினவியபோது, பட்டதாரிகளான ஆசிரியர்களின் சான்றிதழ்களை உறுதி செய்வதற்காக அனுப்பியுள்ளதாகவும், அதற்கான பதில் கிடைத்ததும் அவர்கள் உள்வாங்கப் படுவார்கள் எனவும் உறுதி அளித்ததோடு அவர்கள் ஆசிரிய கலாசாலைகளில் இணைந்து கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தார். (ச)

## கனடாவின் தீர்மானத்தை..

போது மேற்கொள்ளப்பட்ட மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் வகையில் பரிந்துரைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் மனிதவுரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் தமது எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதே, 2013ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டை புறக்கணிப்பது என்ற தீர்மானத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் வகையில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லையேல் 2013ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டை புறக்கணிப்பது என்ற தமது தீர்மானத்தில் மாற்றம் இருக்காது என அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங் கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், நம்பகரமானதுமான விசாரணைகளின் அவசியம் தொடர்ந்தும் காணப்படுவதாக பிரித்தானியா தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-5)

## அங்கவீனமான பிள்ளை...

இன்னும் காயங்களிலிருந்து இரத்தம், ஊனம் வடிந்த வண்ணம் இருக்கின்றது. ஒழுங்கான முறையிலே இவர்களுக்கான மருத்துவ வசதிகள் இல்லாததால் இவர்கள் மேலும் மேலும் நோய்களால் துன்பப்படுகிறார்கள். சி.ஆர்.பி, நியூமகசின், வெலிக்கடை பெண்கள் பிரிவு, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற சிறைகளில் எங்களுடைய பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

இவர்களில் அனேகமானவர்கள் இறுதி யுத்தத்தின் போது அரசாங்கத்தின் வாக்குறுதியினை நம்பி படைத்தரப்பினரிடம் சரணடைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியுத்தத்தில் சரணடைந்த குறிப்பிட்ட ஒரு தொகுதி முன்னாள் போராளிகளை புனர்வாழ்வளித்து அவர்களை சமூக மயப்படுத்தியுள்ளீர்கள். இது எங்களுக்கும் மிக மிக மகிழ்ச்சியினை தந்திருக்கின்றது. இருந்தாலும் இதுபோன்று எங்களுடைய பிள்ளைகளையும் நீங்கள் விடுதலை செய்யும் போது தான் எங்கள் அனைவருடைய மனங்களிலும் முழுமையான சந்தோசங்களை காணமுடியும்.

இதற்கு முன்பு நாங்கள் பல தடவை நீதிமன்றங்களிலும், இது சம்பந்தமான அரச அதிகாரிகளுடனும் பல முறை தெரிவித்திருந்ததும் எந்தப் பலனும் எங்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கவில்லை. அங்கவீனத்துடன் சிறைக்குள் வாடித் தவிக்கின்ற எங்களுடைய பிள்ளைகளையும் உறவுகளையும் இப் புத்தாண்டிலாவது எங்களோடு சேர்ந்து வாழ்வதற்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

கருணை உள்ளத்துடன் எங்கள் பிள்ளைகளை மன்னித்து அனைவருடைய மனங்களிலும் நிரந்தரமான சமாதானத்தயும் சந்தோசத்தையும் வழங்குமாறு இலங்கையின் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நாடாளவிய ரீதியாக பெற்றோர், உறவினர்கள் இக் கடிதத்தை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தனர். இதன் பிரதி ஒன்று படைத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.